பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 30 சனிக்கிழமை 12.02.2022 கதிர் 99

### இது ரகசியம் அல்ல!

லண்டனில் இருந்து தமிழ் அம்மணி ஒருவர் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் தொலை பேசி அழைப்பு எடுத்தார். எமது பத்திரிகையின் – எனது எழுத்துக் களின் – நீண்ட நாள் வாசகர் அவர். அவ்வப்போது செய்திகள் குறித்து என்னுடன் ☞2

# வவுனியாவில் கோட்டாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்



(வவுனியா நிருபர்)

வவுனியா பல்கலைக்கழகத்தை திறந்து வைப்பதற்கு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ நேற்று விஜயம் செய்த நிலையில் அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, பம்பைமடுவில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்துக்கு ஜனாதிபதி சென்றிருந்த நிலையில் கறுப்புக் கொடிகளுடன் வருகை தந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பல்கலைக் கழகம் முன்பாக சென்று போராட்டத்தில் ஈடுபட முனைந்தனர்.

இதன்போது பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டதுடன், விசேட ☞11



## இலங்கை, இந்திய அரசுகளுக்கு எதிர்ப்பு

# ரயில் நிலையத்தை முற்றுகையிட்டு இராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டம்

## அடையாள அட்டைகளை ஒப்படைக்க முடிவு

தமிழக மீனவர்களைக் கைதுசெய்யும் இலங்கை அரசைக் கண்டித்தும், தமிழக மீனவர்களின் எதிர்ப்பையும் மீறி தமிழக மீன்பிடிப் படகுகளை இலங்கை அரசு ஏலமிட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காத இந்திய மத்திய அரசைக் கண்டித்தும் நேற்று இராமேஸ்வரம் மீனவர்கள் ரயில் நிலையம் முன்பு தரையில் அமர்ந்து முற்றுகைப் போராட்டம் நடத்தினர். ☞2



# எங்களுக்கு நடக்கும் அநீதியை சகலரும் திரும்பிப் பாருங்கள்!

### வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் ஊடக சந்திப்பில் கோரிக்கை

(வவுனியா நிருபர்)

எமக்கு நடக்கும் அநீதியை நாடாளுமன்ற உறுப்பினர்களும், மக்களும் திரும்பிப் பாருங்கள் என்று வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் சிவானந்தம் ஜெனிற்றா தெரிவித்தார்.

வவுனியாவில் ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று இடம்பெற்ற போராட்டத்தின் ☞11

# தமிழ்த் தேசியக் கட்சிகளின் கருத்தரங்கு திடீரென இரத்து

(இ.கலையமுதன்)

ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகளின் கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று இடம்பெறாது என ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும் அரசியல் ஆய்வாளர்களும் கலந்து ☞11

### சுகயீனம் காரணமாக உயிரிழந்த

# யாசகரின் பையில் இருந்து நான்கு இலட்சம் ரூபா மீட்பு!

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்திலுள்ள ஹக்மன பகுதியில் திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்த யாசகர் ஒருவரிடமிருந்து பெருந்தொகையான ☞2

# கொரோனாவால் மேலும் 31 பேர் பரிதாப மரணம்

இலங்கையில் மேலும் 31 கொரோனா மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு மரணமடைந்த 31 பேரில், 18 ஆண்களும், 13 பெண்களும் அடங்குகின்றனர். இவர்களில் 60 வயதுக்கு மேற்பட்டோர் 26 பேர் என்பதும் ☞2

# அந்நியச் செலாவணிக்கான தட்டுப்பாடு தற்காலிகமானது

### நிதி அமைச்சர் பஸில் கூறுகின்றார்

நாட்டில் அந்நியச் செலாவணிக்கு நிலவும் தட்டுப்பாடு தற்காலிகமானது என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நிதி அமைச்சில் நேற்று நடைபெற்ற கூட்டத்தின்போதே அவர் இந்த விடயத்தைக் கூறினார். ☞11



# வவுனியா கனகராயன்குளத்தில் காருடன் பஸ் மோதுண்டு விபத்து

### 5 பேர் வைத்தியசாலையில்

(வவுனியா நிருபர்)

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் நேற்று மதியம் காருடன் இ.போ.ச. பஸ் மோதி ☞2






# என் வெற்றிக்காகத் தியாகம் செய்தவரே மங்கள சமரவீர!

### பிரதமர் மஹிந்த புகழஞ்சலி

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது, நான் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்டபோது, பல சவால்களை எதிர்கொண்டேன். ☞11



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
பேசுவார். நேரடிப் பரிச்சயம் ஏதுமில்லை.

இம்முறை தொலைபேசி அழைப்பு எடுத்ததும் அவர் கேட்ட கேள்வி ஆச்சரியப்பட வைத்தது.

"நீங்கள் மஹிந்தரின் நண்பராமே? உண்மையா? அவருடன் பேசுவீர்களா?" – என்று பட்டெனக் கேட்டார்.

"நீங்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையா குறிப்பிடுகின்றீர்கள்?" – என்று நான் திரும்பக் கேட்டேன்.

அவருக்கு என் கேள்வி நக்கலாகப் பட்டிருக்கும் போல. பதிலையும் நக்கலாகவே கேள்வியாகக் கேட்டார்.

"வேறு யாரை...?" – என்றார் அவர். நான் அவருக்கு ஆறுதலாகப் பதிலளித்தேன்.

"நான் ஒரு சிரேஷ்ட பத்திகையாளன். நீண்டகாலம் இத்துறையில் இருக்கிறேன். பத்திரிகை ஆசிரியராகவும் இரண்டு, மூன்று தசாப்த காலம் நீடிக்கிறேன். அவரும் அதே இரண்டு, மூன்று தசாப்த காலம் முன்னணியில் நீடிக்கும் மூத்த அரசியல்வாதி. அதனால் நீண்ட காலம் பரஸ்பர அறிமுகம் – பழக்கம் – பரிச்சயம் – உண்டு. அதுவும் தமிழர் – சிங்களவர் இன முரண்பாடு மோசமாக வெடித்துள்ள கட்டத்தில், அவர் சிங்கள அரசியல் தலைவர், நான் தமிழர் தரப்பின் கருத்தியலைப் பிரதிபலிக்கும் பத்திரிகையாளன். அதனால் சற்று அறிமுகம் – நெருக்கமாக – உண்டு. அவ்வளவுதான். அது சரி, ஏன் இந்தக் கேள்வியைத் திடீரெனக் கேட்டீர்கள்...?" – என்று கேட்டேன் நான்.

"என் சார்பில் அவரிடம் ஒரு கேள்வி கேட்டுப் பதில் பெற வேண்டும். பெற்றுப் பிரசுரிப்பீர்களா?" – என்று வினாவினார் அவர்.

"என்ன கேள்வி?" – என நான் கேட்டேன்.

"அநுராதபுரத்தில் நடந்த மொட்டுக் கட்சிக் கூட்டத்தில் பிரதமர் பெரிய முழக்கம், கர்ச்சனை எல்லாம் செய்திருந்தார் என உங்கள் பத்திரிகையில் செய்தி வெளியிட்டிருந்தீர்கள். முடியுமானால் அடுத்த தேர்தலில் வென்று காட்டுங்கள் என்று எதிர்க்கட்சிகளுக்கு அவர் சவால் வேறு விட்டிருக்கின்றார் எனவும் தெரிவித்திருக்கின்றீர்கள். நல்லது. அது தொடர்பாக அவரிடம் ஒரு விடயம் நேரில் கேட்டு பதில் பெறவேண்டும். அதைப் பெற்று பிரசுரிப்பீர்களா?" – எனக் கேட்டார் அந்த அம்மணி.

"என்ன கேள்வி?" – என்று திரும்பவும் கேட்டேன்.

"நாடாளுமன்றத் தேர்தலுக்கு மூன்று வருடங்களுக்கு மேல் காத்திருக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலுக்கும் இன்னும் இரண்டரை வருடங்கள் காவல் இருக்க வேண்டும். அவரது சவாலுக்காக அவ்வளவு தூரம் காத்திருப்பதா? சவாலை நிறைவேற்றுவதற்கு அவர் வாய்ப்புத் தந்தால்தானே எதிரணிகள் நிரூபித்துக் காட்ட முடியும். அவரும் அவரது அரசும் நினைத்தால் இரண்டு மாதத்துக்குள் மாகாண சபைத் தேர்தலை, அறிவித்து நடத்த ஏற்பாடு செய்யலாம். அதேபோல நீடிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தை அடுத்த மாதத்துடன் இடைநிறுத்தி உடனடியாகவே உள்ளூராட்சித் தேர்தல்களையும் நடத்த முடியும். இந்த இரண்டு தேர்தல்களுமே நாடளாவிய ரீதியில் நடத்தப்படுகின்றமையால் அவையும் தேசிய தேர்தல்களுக்குச் சமமானவைதான். அப்படி இல்லாவிட்டால், அடுத்த பெப்ரவரிக்குப் பின்னர் முற்கூட்டியே நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டும் பொதுத் தேர்தலை நடத்தலாம். எதிர்க்கட்சிகளுக்கு சவால் விடுக்கும் பிரதமர், அதை எதிர்க்கட்சிகள் ஏற்றுக் கொண்டு முகம் கொடுக்கவும் வாய்ப்பளிக்க வேண்டுமல்லவா? இந்த மூன்று 'ஒப்ஷன்களில்' (சாத்தியங்களில்) எதை அவர் எதிர்க்கட்சிகளுக்கு வழங்குவார் என்று ஒரு தடவை கேட்டுக் சொல்வீர்களா? உள்ளூராட்சித் தேர்தலையா? மாகாண சபைத் தேர்தலையா? அல்லது முற்கூட்டிய நாடாளுமன்றத் தேர்தலையா? எதுவென்று ஒரு தடவை கேட்டுப் பதிலைப் பெற்று செய்தியாக வெளியிடுங்கள்...!" – என்றார் அந்த அம்மணி.

இந்து மதத்தில் முருகனுக்கு 'சுவாமிநாதன்', 'தகப்பன் சாமி' என்றெல்லாம் பெயர் உண்டு. பிரணவ மந்திரத்தின் பொருளைத் தந்தைக்கு உபதேசித்து, அவருக்கே குருவானமையால் இந்தப் பெயராம்.

பிரதமர் மஹிந்தரிடம் இந்தக் கேள்வியை, இப்படிக் கேளுங்கள் என்று என்னைத் தொலைபேசியில் வழிப்படுத்திய அந்த அம்மணியின் வயதும், எனது ஊடகப் பணிக் காலமும் ஏறத்தாழ சரிசமனாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

முருகனிடம் பக்குவமாக அமர்ந்து, தந்தை சிவன் பாடம் கேட்ட மாதிரி, பிரதமர் மஹிந்தவிடம் எப்படிக் கேள்வி கேட்க வேண்டும் என்ற அந்த அம்மணியின் பாடத்தை தொலைபேசியில் 'ஓம், ஓம்' என்று கூறி ஏற்றுக் கொண்டேன் நான்.

எல்லாம் எங்கள் நிலைமை. வாய்ப்புக் கிடைக்கும் போது பிரதமரிடம் இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும். பார்ப்போம்.

★ ★ ★

வரும் செவ்வாய்க்கிழமை 15ஆம் திகதி இலங்கை மத்திய வங்கி 7 ஆயிரத்து 900 கோடி ரூபாவுக்கான பிணை முறிக்கு ஏலம் விட இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த ஏலம் எதற்குத் தெரியுமா? நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கை, பொருளாதார மேம்பாடு போன்றவற்றுக்காகவா என்று தேடிப் பார்த்தேன்.

வேறொன்றுமில்லை. மூன்று நாள்கள் கழித்து – அதாவது 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை – ஏற்கனவே ஏலம் விட்டு, விற்பனை செய்த திறைசேரி பிணை முறிகளுக்கான முதிர்ச்சி காலம் வருகின்றது. அன்றைய தினம் சுமார் 5 ஆயிரத்து 80 கோடி ரூபா பிணை முறிகளுக்கான முதிர்ச்சித் தொகைக்குப் பணம் செலுத்த வேண்டியிருக்கின்றது.

செவ்வாய் புதிய பிணை முறைகளை ஏலத்தில் விட்டுப் பணத்தைப் பெற்று, முதிர்ச்சி அடையும் பழைய பிணை முறிகளுக்கானகொடுப்பனவைவெள்ளியன்று அரசு செலுத்தப்போகின்றது.

அதாவது, கடன் தவணைக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு புதுப் புதுக் கடன்களை வாங்கும் சமாளிப்பு நடவடிக்கை இது. தொடர்ந்து இந்தத் தந்திரத்தையே அரசு பயன்படுத்துவதால் வட்டிக்கு, வட்டி, குட்டி போட்டு, அது முதலின் பெறுமதியையும் தாண்டி விடும்.

இப்படிக் கடன் வாங்கித் திருவிழா நடத்துவதற்கு மத்திய வங்கி, திறைசேரி , நிதி அமைச்சு போன்றவற்றுக்கு பொருளாதாரத் துறையில் இரண்டு, மூன்று கலாநிதிப் பட்டங்கள் பெற்றவர்கள் எல்லாம் தேவையா? எனக்கு விளங்கவில்லை.

வெள்ளிக்கிழமை கொடுப்பனவுக்குத் தேவையான 5 ஆயிரத்து 80 கோடி ரூபா அளவுக்கு புதிய பிணை முறிகள் செவ்வாயன்று ஏலத்தில் விற்கப்படாவிட்டால் அரசு என்ன செய்யும் என்று கொழும்பு நண்பர் ஒருவரிடம் கேட்டார்.

அவர் "வெரி ஸிம்பிள்" – என்று பதிலளித்தார்.

"என்ன பிரச்சினை? புதிதாக ஐயாயிரம் ரூபா நோட்டுக்களை அச்சிட்டு, அந்த முதிர்ச்சிக் காலப் பிணைமுறிகளை வைத்திருப்போருக்கு வழங்கி விட்டால் முடிந்தது பிரச்சினை" – என்றார் அவர்.

நாடு எங்கே போய் நிற்கப் போகின்றது? எனக்குத் தெரியவில்லை.

– மின்னல் –

## ரயில் நிலையத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
இதன்போது 15 நாள்களில் மீனவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் தங்களது அடையாள அட்டைகளை அரசிடம் ஒப்படைக்க முடிவு செய்துள்ளனர்.

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 11 மீனவர்களையும் அவர்களது மூன்று விசைப்படகுகளுடன் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்தனர். கைதான மீனவர்கள் யாழ்ப்பாணம் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கைதுசெய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்களை உடனடியாகப் படகுகளுடன் விடுதலை செய்ய வேண்டும், தொடர்ந்து இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதையும், கைது செய்வதையும் நிறுத்த வேண்டும் எனக் கோரியும், தமிழக மீனவர்களின் எதிர்ப்பை மீறி பல கோடி ரூபா மதிப்பிலான நூற்றுக்கும் மேற்பட்ட இலங்கை வசம் இருந்த மீன்பிடி விசைப்படகுகளை இலங்கை அரசு ஏலம் விடுவதற்கு மத்திய அரசு எதிர்ப்பு தெரிவிக்காததைக் கண்டித்தும் நேற்று ரயில் நிலையத்திலிருந்து புறப்படும் சென்னை ரயிலை மறித்து ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட மீனவர்கள் முடிவு செய்திருந்தனர்.

இதற்கமைய நேற்று மாலை 4 மணியளவில் இராமேஸ்வரம் மீனவர்கள் மற்றும் இலங்கைக் கடற்படையால் சிறை பிடிக்கப்பட்டு மீனவர்களின் குடும்பத்தினர் உள்ளிட்ட சுமார் 300 இற்கும் மேற்பட்டோர் இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலுள்ள மீன்பிடி அனுமதி சீட்டு அலுவலகத்தில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு இராமேஸ்வரம் ரயில் நிலையம் நோக்கி ரயிலை மறித்து போராட்டம் நடத்த வந்தனர்.

அப்போது பாதுகாப்புப் பணியில் இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் ரயில் நிலையம் முன்பு தடுப்புகள் வைத்து மீனவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

அதிகாரிகள் மீனவர்களுடன் பேச்சு நடத்தி ரயில் மறியல் போராட்டத்தைக் கைவிடுமாறு கோரிக்கை விடுத்தனர்.

ஆனால், போராட்டத்தைக் கைவிட மறுத்த மீனவர்கள் ரயில் நிலையம் முன்பு தரையில் அமர்ந்து முற்றுகைப் போராட்டம் நடத்தினர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், எதிர் வரும் 15 நாள்களுக்குள் இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை விடுதலை செய்ய வேண்டும், இலங்கை அரசால் ஏலமிடப்பட்ட படகுகளை தமிழக மீனவர்களிடம் மீண்டும் திருப்பித் தர வேண்டும் எனக் கோரிக்கை வைத்தனர்.

மீனவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படாத பட்சத்தில் இராமேஸ்வரத்தில் உள்ள அனைத்துப் படகுகளின் உரிமம் மற்றும் மீனவர்கள் இந்தியப் பிரஜை இல்லை எனக் குறிப்பிடும் வகையில் ஆதார் அட்டை, குடும்ப அட்டை, மீனவர் அடையாள அட்டை உள்ளிட்டவைகளை இராமேஸ்வரம் தாசில்தார் அலுவலகத்தில் ஒப்படைக்கப் போவதாகக் கூறி மீனவர்கள் முற்றுகைப் போராட்டத்தைக் கைவிட்டு கலைந்து சென்றனர்.

இவ்விடயம் குறித்து இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் ஜேசுராஜா ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

## யாசகரின் பையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
பணம் மீடக்கப்பட்டுள்ளது.

குறித்த யாசகரின் காற்சட்டைகளிலிருந்து சுமார் 4 இலட்சம் ரூபா பணம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹக்மன – கொங்கல பகுதியில் வாழ்ந்து வந்த 69 வயதான ஈ.எஸ். விமலதாஸ என்ற யாசகரிடமிருந்தே இவ்வாறு பணம் கைப்பற்றப்பட்டுள்ளது.

அவர் தனது வீட்டுக்கு அருகிலேயே இறந்து கிடந்துள்ளார்.

## வவுனியா கனக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
விபத்துக்குள்ளானதில் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த கார் கனகராயன்குளம் பகுதியில் வீதியின் எதிர்த் திசைக்கு திரும்ப முற்பட்டுள்ளது.

இதன்போது அதே பாதையில் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் காருடன் மோதி விபத்துக்குள்ளானதுடன் பஸ் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து பாதையை விட்டு விலகி அருகேயிருந்த ஓர் காணியினுள் புகுந்தது.

இந்த விபத்தில் 5 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கனகராயன்குளம் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கொரோனாவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 754 ஆக அதிகரித்துள்ளது.




வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கணினி அறிவுடைய பெண் வேலையாள்கள் தேவை.

தொடர்பு:- 077 887 6969
077 200 0230

# இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவராக ஜூலி சங் நியமனம்!



இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவராக ஜூலி சங் நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் துணை வெளியுறவு செயலாளர் வெண்டி ஆர். ஷெர்மன் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

ஜூலி சங் இதற்கு முன்னர் மேற்கு அரைக்கோள விவகாரங்களுக்கான மாநில உதவி செயலாளராக பணியாற்றியுள்ளார். அத்துடன், இவர் செயலாளரின் சிறப்பு மரியாதை விருது உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

மேலும் முன்னதாக இவர் கம்போடியாவின் நொம்பென் நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் துணைத் தலைவராகவும் தாய்லாந்தின் பேங்கொக்கில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பொருளாதார ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார்.

ஈராக்கின் பாக்தாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இடைநிலை ஒருங்கிணைப்பாளருக்கு சுங் தலைமை பணியாளராகவும் பணியாற்றியுள்ளார்.

மேலும் கொலம்பியா, வியட்நாம் மற்றும் ஜப்பானில் உள்ள அமெரிக்கத் தூதரகங்களிலும், சீனாவின் குவாங் சோவில் உள்ள அமெரிக்கத் துணைத் தூதரகத்திலும் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




## பலரைக் கடித்துக் குதறும் கட்டாக்காலி நாய் தகவல் அறிவிக்கக் கோரும் யாழ்.மாநகரசபை

யாழ்.நகர் மத்தி பகுதியில் நேற்று கட்டாக்காலி நாய் ஒன்று வெளிநாட்டு சுற்றுலா பயணி ஒருவர் உள்ளிட்ட 10 இற்கும் மேற்பட்டவர்களைக் கடித்துள்ளது.

யாழ்.நகர் மத்தியில் கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதி என்பனவற்றில் கடந்த வியாழக்கிழமை மதியம் முதல் மாலை வரையிலான நேரத்தினுள் 10 இறகும் மேற்பட்டவர்களை நாய் கடித்துள்ளது.

அதேவேளை அப்பகுதிகளில் சுமார் 10 இற்கும் மேற்பட்டவர்களை அந்த நாய் கடித்துள்ளது.

குறித்த நாய் மாநகர சபை ஊழியர்கள் ஊடாக பிடிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், நாய் தொடர்பிலான தகவல்கள் தெரியாமையால் நாயைப் பிடிக்க முடியவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நாய் தொடர்பிலான தகவல்கள் தெரிந்தவர்கள் மாநகர சபைக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## புவிச் சரிதவியல் மற்றும் சுரங்க பணியக தலைவர் பதவி நீக்கம்!

புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் அநுர வல்பொல திடீர் எனப் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அமைச்சர் மஹிந்த அமரவீர இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மன்னாரில் நிதிக் குவியல்

உலக நாடுகளிடம் கடன் வாங்கிக் குவித்தும், தேசிய சொத்துக்களை விற்றோ, அடைமானம் வைத்தோ, குத்தகைக்கு விட்டோ கிட்டும் நிதி மூலமும் தனது பொருளாதாரத்தை நடத்தி வருகின்றது இலங்கை.

அதன் அடுத்த கட்டம் இப்போது கட்டவிழப் போகின்றது என்கின்றன கொழும்புத் தகவல்கள்.

நாட்டின் சரிந்து கிடக்கும் பொருளாதாரத்தை அதன் மூலம் தூக்கி நிறுத்தி விடலாம் என்று கருதுகின்றது ராஜபஷ்ய ஆட்சிப் பீடம்.

மன்னாரை ஒட்டிய கடலில் நடத்தப்பட்ட பூர்வாங்க ஆய்வுகளில் பெருமளவு மசகு எண்ணெய் மற்றும் எரிவாயுப் படுக்கைகள் இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. அவற்றை குறுகிய காலத்துக்குள் விற்றுப் பணமாக்கி, ஏப்பமிட்டு, பொருளாதாரத்தையும் செழிக்க வைப்பதாகக் காட்டி, இழந்துவிட்ட மக்கள் செல்வாக்கையும் மீளக் கட்டி எழுப்பி விட முடியும் எனத் திட்டமிடுகின்றது தற்போதைய ஆட்சிப்பீடம்.

மன்னார் படுக்கையில் இருநூறு கோடி பரல் மசகு எண்ணெயும், ஒன்பது லட்சம் கோடி கன அடி இயற்கை எரிவாயுவும் புதைந்து கிடக்கின்றன எனப் பூர்வாங்க மதிப்பீடுகள் சுட்டுகின்றன. இவற்றைக் காட்டி, நேரத்துடனேயே நிதியைச் சூறையாடி நாட்டைச் செழிப்பானதாகக் காட்டும் திட்டமே இப்போது கட்டவிழ்கின்றது.

இதற்காக மன்னார் வளைகுடாப் பகுதியில் இந்த எண்ணெய், இயற்கை எரிவாயு ஆகியவை புதைந்துள்ளன என்று அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகள் 837 துண்டங்களாக வகுக்கப்பட்டு, அடையாளமிடப்பட்டு, கடந்த ஜூலையில் 2238 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றைத் துண்டங்கள் கொண்ட தொகுதிகளாகப் பல தரப்பினரிடம் விற்றுப் பணமாக்கிக் கொள்வதுதான் அரசின் இப்போதைய கைங்கரியம்.

இதற்கான பொறுப்பை சக்தி வலு அமைச்சர் உதயகம்மன் பிலவிடம் ஒப்படைத்திருக்கின்றது ராஜபக்ஷ ஆட்சிப் பீடம்.

இது தொடர்பில் நடவடிக்கையை முன்னெடுப்பதற்கான சட்ட அங்கீகாரத்தைப் பெறும் நோக்கத்துடன் பெற்றோலிய மூலவளங்கள் சட்டத்தை கடந்த ஆண்டு ஒக்ரோபரில் நிறைவேற்றியிருக்கின்றது அரசு.

அடுத்த மாதம் ஏழாம் திகதி முதல் அமெரிக்காவில் சக்தி மூல வளம் தொடர்பான உச்சி மாநாடு ஒன்று நடக்க இருக்கின்றது. அதில் இலங்கை சக்தி வலு அமைச்சர் உதய கம்மன்பிலவே நேரில் கலந்து கொள்கின்றார். இலங்கையில் – குறிப்பாக மன்னாரில் – எண்ணெய், எரிவாயு அகழ்வில் ஈடுபடக் கூடிய தனியார் முதலீட்டாளர்களை அங்கு வைத்துத் தேடிப் பிடித்து, வளைத்துப் போடுவதுதான் அவரின் திட்டம் என்று தெரிகின்றது.

அதாவது எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் நாட்டுக்குள் புதையுண்டும் இருக்கக் கூடிய தேசிய சொத்தை – வளத்தை – விற்றுத் தள்ளி, செலவிட்டு, இடாம்பீக ஆட்சியைக் காட்டுவதற்குத் துடிக்கின்றார்கள் ஆட்சிப் பீடத்தினர்.

மன்னார் படுக்கையில் புதைந்துள்ள வளத்தைச் சுரண்டி அள்ளி, நிதியை வாரி இறைத்து, இயன்றதைச் சூறையாடி, கபளீகரம் பண்ணும் ஓர் அடாவடித்தனம் அரங்கேறப் போகின்றது என்பது நிச்சயம்.

இந்த 'நிதி'யை மன்னார் படுக்கையில் இருந்து தோண்டி எடுப்பதற்காக எந்தத் தரப்புடனும் ராஜபக்ஷக்கள் கூட்டுச் சேர்வர் என்பது நிச்சயம் – அது சீனத்தரப்பு என்றாலும் கூட.

ஆனால், மன்னார் கடல் பகுதி இப்பிராந்தியத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசம். அயல் வல்லாதிக்க தேசமான இந்தியாவுக்கும் கூட அதில் அதிக கரிசனை, சிரத்தை உண்டு.

வளத்தைத் தோண்டி எடுப்பதற்காக சர்ச்சைக்குரிய தரப்புக்களை அங்கு நிலைகொள்ள விடாமல் கொழும்பு ஆட்சிப் பீடத்தை எப்பாடுபட்டேனும் வழிப்படுத்துவது முக்கியம். இல்லையேல் வினையை விலை கொடுத்து வாங்கிய விடயமாகிவிடும் அது.

# ரயில் தடம் புரண்டதால் மலையக சேவை தாமதம்




வட்டவளை ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை ரயில் ஒன்று தடம் புரண்டதன் காரணமாக நாட்டின் பிரதான ரயில் பாதையின் சேவைகள் தடைப்பட்டுள்ளன என ரயில்வேக் கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

வட்டவளை வரை மட்டுமே ரயில்கள் இயக்கப்படும் என்றும், பஸ்கள் மூலம் பயணிகளை இடமாற்றம் செய்ய ஏற்பாடு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தடம் புரண்ட ரயில் ஏனைய ரயில்களின் இயக்கத்துக்கு இடையூறாக உள்ளதுன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அதை அகற்றி மீட்டெடுக்கும் வரை சிறிது தாமதம் ஏற்படும் எனவும் ரயில்வே கட்டுப்பாட்டு அறை அறிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை இதுவரையில் நிதியுதவி கோரவில்லை!

### சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு



இலங்கை இதுவரையில் நிதி உதவி எதனையும் கோரவில்லை என சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

தமது பிரதிநிதிகள் அண்மையில் கொழும்பிற்கு விஜயம் செய்திருந்தனர் எனவும், இந்த விஜயம் தொடர்பில் நிறைவேற்று சபை கலந்துரையாட உள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் பிரிவு பணிப்பாளர் கெரி ரைஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் இதுவரையில் அதிகாரபூர்வமாக நிதி உதவிகள் எதனையும் கோரவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், கோரிக்கை விடுக்கப்பட்டால் பேச்சு நடத்தத் தயார் எனவும், இலங்கையின் பொருளாதார நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்துவது தொடர்பாக ஆராய்ந்து வருவதாக இலங்கை அரசாங்கம் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கான தனது உதவிகளை ஜப்பான் குறைத்துள்ளதாகத் தகவல்

இலங்கைக்கு உதவிகளை வழங்குவதை ஜப்பானிய அரசாங்கம் குறைத்துக் கொண்டுள்ளதாக தெற்கு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2020 ஆம் ஆண்டில் இலங்கைக்கு ஜப்பான் வழங்கிய மொத்த உதவிகள் 94 வீதத்தால் குறைவடைந்துள்ளன.

கடந்த 2019 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 42.7 பில்லியன் யென் உதவி வழங்கிய ஜப்பான் அரசாங்கம் 2020 ஆம் ஆண்டில் இந்தத் தொகையை 1.4 பில்லியன்யென்களாகக் குறைத்து கொண்டுள்ளது.

ஜப்பானின் உதவியுடன் நிர்மாணிக்கப்படவிருந்த இலகு ரயில் திட்டத்தை தற்போதைய அரசாங்கம் ரத்து செய்ததைத் தொடர்ந்து இவ்வாறு உதவிகள் குறைக்கப்பட்டுள்ளன என அந்தத் தெற்கு ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

# தீவிரமடைந்துள்ளது கொவிட் 3 நாள்களில் 102 பேர் மரணம்

பதுளை பொது வைத்தியசாலையில் 20 வைத்தியர்களுக்கு கொவிட் வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவசரசிகிச்சைப்பிரிவில்பயணியாற்றும் ஒன்பது வைத்தியர்களில் ஆறு பேர் வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் நாட்டில் கொவிட் தொற்று காரணமாக உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றன என சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

பரிசோதனைகளின் மூலம் பதிவாகும் நோயாளர்களை விட சமூகத்தில் அதிகமான நோயாளிகள் இருக்கலாம் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று நாள்களில் மட்டும் நாட்டில் 102 கோவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன. அந்த மூன்று நாள்களில் தினசரி 30 இற்கும் மேற்பட்ட கொவிட் இறப்புகள் பதிவாகியுள்ளன.

கடந்த 7 ஆம் திகதி 35 கொவிட் மரணங்களும், 8 ஆம் திகதி 36 மரணங்களும், 10 ஆம் திகதி 31கொவிட் மரணங்களும் பதிவாகியுள்ளன.

# பெரும் போகத்தில் நெல்லை கொள்வனவுசெய்ய அரசு முடிவு

இம்முறை பெரும் போகத்தில் 3 லட்சம் மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

பெரும் போகத்தின் அறுவடையுடன் விவசாய சமூகத்தையும் நுகர்வோரையும் பாதுகாக்கும் வகையில் பல வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என நெல் சந்தைப்படுத்தல் சபையின் உப தலைவர் டபிள்யூ.எச்.துமிந்த பிரியதர்ன தெரிவித்துள்ளார்.

நெல் சந்தைப்படுத்தல் சபை போட்டி விலையில் நெல்லை பெற்றுக்கொள்வதால் அறுவடையை நெல் சந்தைப் படுத்தல் சபையிடம் ஒப்படைக்குமாறு நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிரதித் தலைவர் டபிள்யூ.எச்.துமிந்தபிரியதர்ன விவசாயிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# கனிய மணல் அகழ்வு என்ற பெயரில் பறிபோகும் கொக்கிளாய் நிலங்கள்!

## சட்ட நடவடிக்கைக்குத் தயாராகும் மக்கள்

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கொக்கிளாய் கிராமத்தில் கிராம மக்களின் சுமார் 1000 ஏக்கர் பூர்வீக நிலங்கள் கனிய மணல் அகழ்வு என்ற பெயரில் அபகரிக்க நடவடிக்கைகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனக் கிராம மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.





கடந்த வாரம் கொக்கிளாய் முகத்துவாரம் தொடக்கம் கொக்குத்தொடுவாய் வரையான மக்களின் விவசாய செய்கைக்காக பயன்படுத்தும் நிலங்கள் மற்றும் தோட்ட செய்கைக்கான நிலங்கள் குடியிருப்பு நிலங்கள் உள்ளடங்கலாக இவ்வாறு அளவீடு செய்யும் நடவடிக்கையை நில அளவைத் திணைக்களத்தினர் மேற்கொண்டுள்ளனர் எனக் கொக்கிளாய் மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே கொக்கிளாய் கிழக்கு பகுதியில் 16 பேருக்கு சொந்தமான 44 ஏக்கர் பூர்வீக காணிகளை எந்தவித முன்னறிவித்தலோ இழப்பீடோ வழங்காது கையகப்படுத்தி இல்மனையிட் அகழ்வை ஆரம்பித்துள்ள கனிய மணல் கூட்டு தாபனம் தற்போது மேலும் காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கையாக இவ்வாறு முன்னறிவித்தல் எதுவுமின்றி தமது காணிகளை கையகப்படுத்தும் நோக்கோடு நில அளவை செய்து எல்லைப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக காணி உரிமையாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறிப்பாக கொக்கிளாய் கிழக்கு பகுதியில் சில வாரங்களுக்கு முதல் அறுவடை மேற்கொண்ட வயல் நிலங்கள் உள்ளடங்கலாக காணிக்குரிய ஆவணங்களைக் கூட வைத்துள்ளவர்களின் காணிகள் 60 ஏக்கருக்கு மேற்பட்ட பகுதி இவ்வாறு கனிய மணல் கூட்டு தாபனத்துக்காக நில அளவை செய்து எல்லைப் படுத்தப் பட்டுள்ளதாக கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தமது காணிகளில் நில அளவீடு இடம்பெறுவதை அறிந்து அந்த இடத்துக்கு சென்ற காணி உரிமையாளர்களுக்கு நில அளவைத் திணைக் கள அதிகாரிகள் இது மேலிடத்து உத்தரவு இதற்கமையவே நாங்கள் அளவீடு செய்கின்றோம் . உங்கள் காணிகளாக இருந்தால் நீங்கள் நீதிமன்றத்தை நாடுங்கள் எனத் தெரிவித்துள்ளனர் எனக் காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கனிய மணல் அகழ்வுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தக் காணி சுவீகரிப்பு கொக்கிளாய் முகத்துவாரத்திலிருந்து கரையோரமாக கடல் கரையிலிருந்து சுமார் ஐந்நூறு மீற்றருக்கும் அதிகமான பகுதி கிராமத்தின் உள்ளே நீண்டு செல்வதோடு கொக்கிளாய் ,கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய், நாயாறு, செம்மலை கிழக்கு வரை சுமார் 12 கிலோ மீற்றர்களுக்கு அதிகமான கரையோரப் பகுதிகள் வரை இவ்வாறு காணிகளை எதிர்வரும் நாள்களில் அளவீடு செய்து சுவீகரிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே மாவலி எல் வலயம் மற்றும் சிங்கள மீனவ குடியேற்றம் இராணுவ காணி அபகரிப்பு வன திணைக்களம் ,வன ஜீவராசிகள் திணைக்களம் பௌத்த விகாரை அமைப்பதற்கான காணி பறிப்பு என பல்வேறு வகையில் இந்தக் கிராமங்களில் காணி அபகரிப்பு இடம்பெற்ற நிலையில் தற்போது கனிய மணல் கூட்டுதாபனமும் மக்களுக்குச் சொந்தமான காணிகளைக் கையகப் படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதை தமது இருப்பை கேள்விக்குள்ளாக்கும் செயற்பாடு என குறித்த கிராம மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களின் அழைப்பின் பேரில் காணி அபகரிப்புக்காக அளவீடு இடம்பெறும் கொக்கிளாய் பகுதிக்கு சென்ற சட்டத்தரணி தனஞ்சயன் சட்ட நடவடிக்கைகளுக்காக மக்களுடன் கலந்துரையாடி இடத்தையும் பார்வையிட்டார். இவரோடு முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும் சென்று பாதிக்கப்பட்டுள்ள காணி உரிமையாளர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டிருந்ததோடு அளவீடு செய்யப்பட்டுள்ள காணிகளையும் நேரில் சென்று பார்வியிட்டார்.



## அம்பாந்தோட்டை மாநகர சபை மேயர் தனது புதவியை இராஜினாமா

அம்பாந்தோட்டை மாநகர சபை மேயர் பதவியிலிருந்து இராஜினாமா செய்வதாக எராஜ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மாநகர சபையின் மாதாந்த கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயம் தொடர்பாகத் தெரிவித்துள்ளார்.

அவர் 2018 ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை மாநகர சபையின் மேயராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மின்சாரசபைக் கட்டனத்தை பாரியளவில் அதிகரிக்க முடிவு

மின்சாரக் கட்டணத்தை பாரியளவில் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

எரிபொருள்களின் விலையை அதிகரிக்கப்போவதில்லை என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தபோதும் விரைவில் எரிபொருள் விலையை நிச்சயமாக அதிகரிக்கவுள்ளதாக மின்சார சபையின் அழைப்பாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், மின் கட்டணத்தை அதிகரிப்பதன் மூலமே வெற்றிபெற வேண்டும் எனவும் இன்று அதிகளவு மின்சாரம் எரிபொருளில் உற்பத்தி செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் வெகுவிரைவில் கணிசமான அளவு அதிகரிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பில் தொடரும் கடும் மழை தாழ்நிலங்கள் நீரில் மூழ்கும் அபாயம்!



மட்டக்களப்பு மாவட்டத்தில் வியாழக்கிழமைமுதல்பெய்துவரும் கடும் மழை காரணமாக தாழ் நிலங்கள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் பெரும்போக அறுவடையும் பாதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பகுதிகளில் வியாழக்கிழமை தொடக்கம் கடுமையான மழைபெய்து வருகின்றது.

இதன்காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்போக அறுவடைகள் நடைபெற்றுவரும் நிலையில் பெய்தும் மழை காரணமாக அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## இசை நிகழ்ச்சியின் இறுதியில் மோதல் நிவித்திகலவில் பல லட்சம் ரூபா நாசம்

நிவித்திகல பிரதேசத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றில் ஏற்பட்ட மோதலில் பல லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களும் சொத்துக்களும் நாசமாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஒரு குழுவினர் மேடை மற்றும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் மீது கற்கள் மற்றும் பிற பொருளகளை வீசினர், மேலும் சிலர் நிகழ்ச்சியில் பங்கேற்ற இசைக் குழு மற்றும் நடனக் குழுக்களின் உறுப்பினர்களையும் தாக்க முயன்றனர். நிவித்திகல பொது மைதானத் தில் கடந்த புதன்கிழமை இரவு 11.30 மணியளவில் இசை நிகழ்ச்சி நிறைவடைந்ததை அடுத்து இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நிகழ்ச்சியின் உபகரணங்கள் மற்றும் பிற சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் 14 லட்சத்துக்கும் அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது, அதே நேரத்தில் நிகழ்ச்சியில் நடனமாடிய நடனக் கலைஞர்களின் தனிப்பட்ட சொத்துக்கள் திருடப்பட்டமை தொடர்பாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir





இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 278

### 705.பிரபாகரனுடன் பேசி இணக்கங்கள் எவையும் ஏற்பட்டனவா?

யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் மூலமாக தொடர்புகள் ஏற்படுத்தி, அவருடன் பிரபாகரனைச் சந்தித்தோம். அப்பொழுது பேபி சுப்பிரமணியமும் அவருடன் கூட இருந்தார். பிரபாகரனது முகத்தில் எவ்வித சஞ்சலமோ, கலக்கமோ தெரியவில்லை. நடந்த கொலை, நடத்தப்பட வேண்டியதே என்றும், தங்களது பாதையில் குறுக்கிடுபவர்கள் வெட்டிச் சாய்க்கப்பட வேண்டும் என்ற தொனியே இருந்தது.

பிரபாகரனைப் பொறுத்தளவில் சுந்தரம் விடுதலைப் புலிகளின் ஆரம்பகால உறுப்பினர். அவருக்கு இயக்கத்திற்குத் துரோகமில்லாது விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதும், இயக்க விதியை மீறி இன்னுமொரு குழுவை ஆரம்பித்து அதனை இயக்கமாக நடத்த முற்படுவது மரண தண்டனைக்குரிய குற்றம் என்பதும் தெரியும். அந்தத் தண்டனையை அவர் எதிர்பார்த்திருந்தார். அது நிறைவேற்றப்பட்டது. அவ்வளவுதான் என்பதே வாதம்.

இப்படியான கொலைகள் விடுதலைப் போராட்டக் குழுக்களின் வளர்ச்சியை மட்டுமல்ல, பொதுவாகவே மனித உரிமை மீறல்களின் அடிப்படையில் தமிழ் சமூகம் எடுக்கும் முயற்சிகளையே பலவீனமாக்கி விடும் என்று விளங்கப்படுத்தினோம்.

பிரபாகரனைப் பொறுத்தளவில் இந்த வியூகங்களோ, சர்வதேச ரீதியில் இவை தரக்கூடிய தாக்கங்களோ பற்றி அவர் ஆதங்கப்பட்டவராகத் தெரியவில்லை. இராணுவ ரீதியில் தமிழ் மக்கள் பலமடைந்து விட்டால் எல்லோரும் அதைக் கணக்கெடுத்துப் பேச்சுக்கள் நடத்துவார்கள். அதில் இந்த மனித உரிமை என்பதெல்லாம் அடிபட்டுப் போகும். அப்படியான பலத்தை வளர்க்க இப்படியான புல்லுருவிகளை அழிக்க வேண்டும். ஆகவே, அந்த நெளிவு சுழிவுகளில் எங்களை ஈடுபட வேண்டாம் என்று பிரபாகரன் நின்றார்.

அவற்றைப் பேசிக் கொண்டு செல்லும்போது பிரபாகரன், சுந்தரம் இயக்கத்திலிருந்து வெளியேறி அரசியல் மாத்திரம் செய்யும் ஏதும் கட்டமைப்பில் இயங்கி இருந்தால் அது வேறு விடயம். இயக்கத்திலிருந்த பொழுதே ஊர்மிளா விடயமாக உமா மகேஸ்வரனைக் கொல்லப் பணிக்கப்பட்டவர்களில் சுந்தரமும் ஒருவர். அவரால் அது செய்யப்படவில்லை. அப்படி இயக்கத்திற்குத் துரோகமிழைத்தவர் பின்னர், அதே உமா மகேஸ்வரனைக் கூட்டி வந்து போட்டி இயக்கம் தொடங்க அனுமதிக்க முடியாது. இராணுவ ரீதியாகத் தன்னை மீறி யாரும் செயற்படுவது தங்களது விடுதலைப் பாதையைக் குழப்பும். ஆகவே உமாவும் கூட தானாக விலத்திப் போகா விட்டால் அழிக்கப்படுவார். காலம் பார்த்திருக்கிறோம் என்றார்.

கந்தசாமிக்குக் கோபம் வருவது மிகக் குறைவு. நறுக்காக வெட்டொன்று துண்டு இரண்டு என்றுதான் பேசுவார். எங்களுக்கெல்லாம் 'யார், யாருக்கு விளக்கங்கள் கொடுக்க வேண்டும், யாருக்கு ஒரு வசனத்தில் பதில் தர வேண்டும், யார் எந்த பதிலுக்கும் அருகதை அற்றவர் என்பவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும்' என்று புத்தி சொல்பவர்.

தனது கண் ஜாடைகளில் இதில் பிரயோசனம் இல்லை, இவை இவர்களுக்கு விளங்கப் போவதும் இல்லை, செய்வதை செய்யட்டும், போவோம் என்று குறிப்புக் காட்டியபடி பிரபாகரனைப் பார்த்து "அப்படியானால் நீ சொல்லுகிற மாதிரி – நீ நினைப்பது போல் – ஒவ்வொரு வெங்காயத் தோலையும் உரித்துப் பார்க்க வேண்டும். ஆனால் அப்படி அப்படியே உரித்துக் கொண்டு போனால் அங்கு எதுவுமே மிஞ்சப் போவதில்லை. அது உனக்கு விளங்குகிறதா? இவை வெங்காயமில்லை" – என்று கோபமாகவே கேட்டார்.

சில மணித்தியாலப் பேச்சுக்களின் பின் யோகேஸ்வரனுடன் தனியாக சில நிமிடங்கள் சந்தித்த பின், தான் சுந்தரம் சம்பந்தமாக புளொட் அமைப்புக்கு எதிராக மேலதிக நடவடிக்கை எடுக்க மாட்டேன், ஆனால் அவர்கள் தங்களது பாதைகளில் குறுக்கிட்டால் அது வேறுவிதமாகக் கையாளப்படும் என்றும் வீராப்புடன் தெரிவித்தார்.

இவற்றை உமாவுக்குத் தெரிவித்து, அந்த நேரத்தில் ஏற்படவிருந்த கொலை வெறிகளை ஓரளவு தணித்து விட்டோம்.

### 706.கந்தசாமியின் உவமானம் ஏன்?

அந்த நேரத்தில் அது எங்களுக்குமே விளங்கவில்லை. அவரால் கோபமாக சொல்லப்பட்டது. பிரபாகரனுக்குக் கூட உறைத்திருக்குமோ தெரியாது – தன்னை வெங்காயம் என்று பேசுகிறாரோ என்று. திரும்பும் வழியில் அதனை கந்தசாமியிடம் கேட்டோம். அவர் நகைச்சுவையாக, தான் ஒன்றும் வள்ளுவன் போல அறிந்து, உணர்ந்து சொல்லவில்லை, அவன் கதைத்தது வெங்காயக் கதை, அதைக் கோபத்தில் காட்டி விட்டேன், நினைத்ததைச் சொன்னேன், அவ்வளவுதான் என்றார்.

ஆனால் யோசித்தால் தமிழ் மக்கள் அடக்குமுறைக்கு எதிராகவும், மனித உரிமை மீறல்களுக்காகவும் சர்வதேச ரீதியில் போராடும் போது, இப்படியாக தாங்களே திரும்ப அதே தவறுகளைத் தமிழ் மக்கள் மேல் சுமத்துவதை எப்படி சர்வதேசம் பார்க்கும்? புலம் பெயரில் தமிழ் மக்கள் ஆதரவுக்காகப் பிரசாரம் செய்யும் நாடுகள் எல்லாமே ஜனநாயக சித்தாந்தத்தில் நம்பிக்கை வைத்தவை. அங்கே இப்படியான சர்வாதிகாரிகளை எப்படி ஏற்றுக்கொள்ள வைப்பது? அவர் இவரை உரிக்க, இவர் அவரை உரிக்க, கடைசியில் ஒன்றும் உருப்படியாக இருக்காது. வெங்காயம் கறிக்கு வாசனையும் ருசியும் தரும். அதுபோல் இவர்கள் வன்முறைப் போராட்டத்துக்கு ருசி சேர்க்கிறார்கள். இப்படியே போனால் கடைசியில் ருசியை பேசக் சொல்லிவிட்டு, காய்ச்சக் கூடிய பாத்திரங்கள் எல்லாவற்றையும் உடைத்து எறிந்து விட்டுத்தான் போவார்கள். – என்று கோபத்தில் ஏசினார்.

இவை 1982 இல் பேசப்பட்டவை. 2009 வரை ஆயுதப் போராட்டங்களாலும் தங்களிடையே நடந்த படுகொலைகளாலும் ருசி சேர்த்தார்கள். ஊடகங்கள் அவற்றை வெற்றி – தோல்வி என்ற வழிகளில் பதிந்தன. அந்த ருசியான கறிகள் சர்வதேசப் பதக்கங்களைப் பெற்றுவிடும் என எதிர்பார்த்தார்கள். ஆனால் விடுதலைப் போராளிகள் என்பதற்குப் பதிலாக 'பயங்கரவாதிகள்' என முத்திரையிடப்பட்டு, சட்டிகள் எல்லாவற்றையுமே உடைத்தெறிந்து, கையேந்தி தமிழ் மக்கள் நிற்கிறார்கள்.

### 707.1982 இற்குப் பின்னராவது விடுதலைக் குழுக்கள் நிதானமாக இயங்கினவா?

அவர்கள் தாங்கள் இயங்கிக் கொண்டிருந்த குளம், ஏரிகளிலிருந்து திமிங்கிலங்களாக நீந்த முயன்றார்களேயொழிய, அவற்றிலிருந்து சர்வதேசமென்ற கடலுக்குள் நீந்திக் கரை சேர்க்கக் கூடிய வழிவகைகளை தமிழ் மக்களுக்காகப் பார்க்கவில்லை. சர்வதேசத்திலும் புலம்பெயர் மக்களிடையேயும் தங்கள் தங்களது இயக்கங்களை வளர்த்துக் கொள்வதிலேயே குறியாக இருந்தார்கள்.

பின்னாளில் பிரபாகரன் ரெலோவுடனும் முரண்பட்டு, அவர்களிடமிருந்து வெளியேறி, பழையபடி தனது தோழர்களுடன் மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளாக இயங்குவதான தகவல்கள் வந்தன. இப்படியான ஏதேச்சதிகாரப் போக்குகளால் ரெலோ அவரை 'தட்ட' முயன்று அது தவிர்க்கப்பட்டது. அவர்களுக்குள்ளும் குழுக்கள், சந்தேகங்கள், நம்பிக்கையீனங்கள் பாசிபோல் படர்ந்திருந்தன. ஒரு குழு பிரபாகரனைத் தட்ட ஓடித்திரிய, சுந்தரம் கொலை செய்யப்பட்டதற்கு தமிழ் நாட்டில் நாகராஜா அஞ்சலித் துண்டு பிரசுரம் வெளியிட, ரெலோவில் இருந்து சிறி சபாரத்தினமும் பிரபாகரனும் அவரைக் கொலை செய்வதற்காகக் கடத்திச் சென்றனர். இது மற்ற இயக்கங்களுக்கும் விதிவிலக்கல்ல. அப்படியான போக்குகளால் தாங்களாகவே எல்லோரும் அழிந்திருப்பார்கள்.

ஆனால் 1983 இல் கடந்த இனக்கலவரம் ஒரு புத்துயிர் தந்தது. புதிய போராளிகள் என்று இந்தியா அவர்களுக்குப் பயிற்சி வழங்க முன்வந்ததால் அது ஏற்பட்டது. புலம்பெயர் மக்களின் நிதி உதவிகளும் வந்துசேர வழக்கமான அதிகாரப் போட்டிகள் தொடங்கின.



யோகேஸ்வரன்

தனிப்பட்ட அதிகாரங்களை மட்டுப்படுத்தி, ஜனநாயக ரீதியாக மத்திய குழுவின் மூலமாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனக் கருத்து மோதலில் வெளியேறிய புளொட் இயக்கத்திலேயே, மத்தியகுழுவின் தலையீடுகள், தனிப்பட்ட அதிகாரங்களுக்காக வெட்டப்பட்டு வெறுப்புக்களையும் விரக்திகளையும் போராளிகளுக்கு ஏற்படுத்தின. உமா மகேஸ்வரன், சுந்தரம், கண்ணன் என்றும், பின் உமா மகேஸ்வரன், கண்ணன், சந்ததியார், வாசுதேவா என்றும் குழுக்கள் ஏற்பட்டு, அவர்களின் உட்பகையில் பலர் அழிந்தார்கள்.

ரெலோ, ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கங்களோடு பிரபாகரன் பின்னர் கைகோர்த்தும், அவர்களைத் தடை செய்தும், அழித்தும், ஏகபோக உரிமையைத் தமிழ் மக்களுக்காகத் தாங்களே கட்டிக் கொண்டமையும் பொதுவாக அறியப்பட்டவை என்பதால் அவற்றை இங்கு விவரிக்கவில்லை. இக்காலச் சம்பவங்கள் கொடுமையையும் கொடூரங்களையும் தான் காட்டும்.

சமாந்தரமாக இந்தியாவின் அரசியல் முனைப்புக்கள் முன்னேறி, இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, இந்தியப்படைகளும் தமிழ்ப் பகுதிகளுக்கு வந்தன.

(வளரும்)



நான்கு இயக்கத் தலைவர்களும் ஒன்றாக

காலைக்கதிர் Kalaikkathir

# பெண்கள் மீதும் பூமித்தாய் மீதும் வன்முறைகளற்ற வாழ்வுக்காக எழுச்சி கொள்வோம் பிரசார நிகழ்வு

அனைத்து பெண்கள், பால் பல் வகைமையினர் மற்றும் பூமித்தாயின் உடல்களுக்காக எழுவீர் எனும் தொனிப் பொருளில் நூறுகோடி பெண்களின் எழுச்சி 2022 பிரசாரம் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

எனவே இந்த பிரச்சாரத்துடன் கிழக்கு பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் இணைந்து கொண்டு எதிர்வரும் 14 ஆம் திகதி பல்கலைக்கழக வட்டாரத்தினுள் மரக்கன்றுகளைக் கொண்டு ஒரு மரநடுகைப் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளது எனப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

கிழக்கு பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் என்.ஜெயராஜ். செயலாளார் ஜீ.மதுசாந்தன ஆகியோர் கடந்த வியாழக்கிழமை ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

உலக சனத்தொகை கணக்கெடுப்பில் மூன்றில் ஒரு பங்கு பெண்கள் தங்களது நாளாந்த வாழ்க்கையில் வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இத்தகைய வன்முறையான பண்பாடுகளை மாற்றி, அனைவரும் இணைந்து வாழும் மகிழ்வான சூழலை உருவாக்குவோம் எனும் நோக்கில் அமெரிக்காவைச் சேர்ந்த நாடகவியலாளரும், பெண்ணிலை வாதியால் முன்மொழியப்பட்டு, பெண்களுக்கு எதிரான வன்முறைகளாலோ, வேறெந்தவிதமான வன்முறைகளாலோ எங்கள் வாழ்வு இருட்டடிக்கப்படாது என்று அறைகூவவும், வன்முறைகளற்ற வாழ்வு மகிழ்வானது என்று பறைசாற்றவும் இந்தப் பிரசாரம் கலைகளுக்கூடாக ஆடுவோம், பாடுவோம், பறையறைவோம் என்ற வகையில் எழுச்சி கொள்வதாக அமைகின்றது.

அதன் அடிப்படையில் நூறுகோடி பெண்களின் எழுச்சி 2022 பிரசாரம் அனைத்து பெண்கள், பால் பல்வகைமையினர் மற்றும் பூமித்தாயின் உடல்களுக்காக எழுவீர்..எனும் தொனிப் பொருளில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அழைப்பு ஆழமான நோக்கம் கொண்டது. பெண்கள் மற்றும் பால் - பால்நிலை அடிப்படையில் ஓரங்கட்டப்படும் மக்கள் அனைவருக்கும் வல்லமையளிக்கும் சமூக அரசியல் மாற்றத்தை நோக்காகக் கொண்டது.

எங்கள் எதிர்காலத்தை அச்சமற்ற, தைரியமான, ஒருவரை ஒருவர் மதிக்கும் ஆழமான நிலைப்பாடுகளின் அடிப்படையிலும், கலைகளின் ஊடாக நம்பிக்கையான வழியில் மேம்பட வைக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே கிழக்கு பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியமும் இம்முறை இந்த எழுச்சி பிரசாரத்தை முன்னெடுப்பதற்கு நூறு கோடி மக்களோடு இணைந்து கை கொடுத்துள்ளது.

பல்கலைக்கழகங்களுக்குள் இருக்கும் ஆதிக்க சூழல் அகற்றப்பட்டு உரிமையுடனான எதிர்கால சமூகங்களுக்கான முன்னோடிகளாக பல்கலைக்கழக மாணவ சமூகங்கள் உருவாகும் வகையில், அனைத்து மாணவர்களும் குறிப்பாக மாணவிகளும் தத்தமது ஆளுமைத் திறமைகளைக் கட்டற்று வெளிப்படுத்தும் உரிமைகள், வெளிகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

மாணவர்களின் ஆளுமைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரச்சூழல் மாற்றப்பட வேண்டும், பாலியல் இலஞ்சம் ஒழிக்கப்பட வேண்டும், சிரேஷ்ட மாணவர்கள் புதிய மாணவர்கள் மீது அதிகாரம் பாராட்டும் பகிடிவதைகள் நிறுத்தப்பட வேண்டும். மாணவர்களுக்கு நட்பான பல்கலைக்கழக் சூழலை ஏற்படுத்தும் வகையில் உள்ளக நடைமுறைகள் சரியாகக் கடைப்படிக்கப்பட வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை ஆரோக்கியமான வகையில் முன்னெடுப்போம், தொடர்ச்சியாக நினைவில் வைத்து செயற்படுவோம் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அருகிவருகின்ற மரக்கன்றுகளைக் கொண்டு ஒரு மர நடுகைப் பிரசாரத்தை எதிர்வரும் 14.02.2022 அன்று பல்கலைக்கழக வட்டாரத்தினுள் செய்ய உள்ளோம்.

பூமியை வளப்படுத்தும் ஆரோக்கியமான மூலவிதைகளை அழிவடையாமல் பாதுகாத்து எம் எதிர்கால சந்ததியினரும் பலன் பெறும் திட்டங்களையும் நம்மில் இருந்து தொடங்குவோம்! பெண்கள் சுயமாகவும், சுதந்திரமாகவும், கட்டுப்பாடுகள் இன்றியும் கற்கும்- மேம்படும் பல்கலைக்கழகச் சூழலை உருவாக்குவோம்!

ஆதிக்கங்கள், பாசிசம், ஏகாதிபத்தியம், முதலாளித்துவம், காலநிலை நெருக்கடிகள், சேட்டைகள், பாலியல் வன்முறைகள், பாலியல் லஞ்சம் போன்றவற்றுக்கு எதிரான உலகளாவிய எழுச்சிகளுடன், பெண்களுக்கெதிரான, பூமித்தாய்க்கு எதிரான வன்முறைகளற்ற வாழ்வுக்காக நூறுகோடி மக்களினதும் எழுச்சியுடன் கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீட மாணவர் ஒன்றியமும் இணைகின்றது. என அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# திருகோணமலை மீனவர்களுக்கான சுருக்குவலை அனுமதிப்பத்திரங்களை உடனடியாக வழங்கவும்

## இம்ரான் எம்.பி. கோரிக்கை

திருகோணமலை மாவட்ட மீனவர்களுக்கான சுருக்குவலை அனுமதிப்பத்திரங்களை உடனடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு -

புத்தளம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் சுருக்குவலைக்கான அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இருந்தும் இதுவரை திருகோணமலை மாவட்டத்தில் இந்த அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதற்கான அனுமதி திருகோணமலை மீன்பிடித் திணைக்கள உதவி பணிப்பாளருக்கு வழங்கப்படவில்லை.

கடைசியாக 2019 ஆம் ஆண்டே இந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. கடந்த



இரண்டு வருட காலமாக இந்த அனுமதி கிடைக்காததால் நூற்றுக்கணக்கான மீனவர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் பாரிய சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இதனால் பலர் கடற்படையினரால் கைதும் செய்யப்படுகின்றனர். எனவே, புத்தளம் மற்றும் மன்னார் பகுதிகளைப் போன்று திருகோணமலையிலும் இந்த அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு அனுமதியை வழங்குமாறு தெரிவித்துள்ளார்.

# தயாசிறி போன்றவர்களுக்கும் ஆப்பு வைப்பார் மைத்திரிபால!

பொலனறுவை மாவட்டத்தை மைத்திரி குடும்பம் ஆக்கிரமித்துள்ளது என்று முன்னாள் ஆளுநரும் மைத்திரிபால சிறிசேனவின் நம்பிக்கைக்குரிய பாத்திரமாகத் திகழ்ந்தவருமான பேசல ஜயரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியவை வருமாறு -

ராஜபக்ஷ குடும்ப ஆட்சி தொடர்பில் கடும் விமர்சனங்களை முன்வைத்தவர்தான் மைத்திரிபால சிறிசேன. ஆனால், இன்று அவர் என்ன செய்கின்றார்? பொலன்னறுவை மாவட்டத்தை தனது குடும்பக்கட்டுப் பாட்டுக்குள் வைத்துள்ளார்.

பொலன்னறுவை மாவட்டத்தில் பொருளாதார மற்றும் அரசியல் பலம் மைத்திரிபால



சிறிசேன குடும்ப வசம்தான் உள்ளது. நாம் முன்னேறி வருவதற்கு முற்பட்டால் தடுத்து நிறுத்தப்படுவோம். நான் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட இருந்தேன். திட்டமிட்ட அடிப்படையில் தடுக்கப்பட்டேன்.

அடுத்து தனது மகனை மைத்திரி நாடாளுமன்றம் கொண்டுவருவார். கட்சித் தலைமைப் பதவியை அவரிடம் ஒப்படைப்பார். அதன் பின்னர் தயாசிறி போன்றவர்களுக்கும் ஆப்பு காத்திருக்கின்றது. - என்றார்.

# தேர்தல்களுக்கு அஞ்சும் தலைவரல்லர் மஹிந்தர்!



## மகன் நாமல் இறுமாப்பு

தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை. கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே நிச்சயம் தேர்தல் நடத்தப்படும். அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். குருநாகலில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

மஹிந்த ராஜபக்ஷ என்பவர் தேர்தலுக்கு அஞ்சும் தலைவர் அல்லர். முன்கூட்டியே தேர்தலை நடத்தித்தான் பழக்கம். எனவே, தேர்தலைப் பிற்போடும் எண்ணம் அரசுக்கு இல்லை. கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே தேர்தல் நடத்தப்படும். அது எந்தத் தேர்தலாக இருந்தாலும் நாம் வெற்றிகரமாக எதிர்கொள்வோம். தேர்தல் என்பது மக்களின் ஜனநாயக உரிமை. அதனை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# தனக்குரிய வாகன அனுமதிப் பத்திரத்தை 6 கோடி ரூபாவிற்குவிற்ற முன்னாள் எம்.பி!

கடந்த அரசாங்கத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியலில் மூலம் தெரிவு செய்யப்பட்டு ஐந்து நாள்கள் மாத்திரம் சபையில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது வாகன அனுமதிப் பத்திரத்தை 6 கோடி ரூபாவிற்கு விற்பனை செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மேற்படி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தற்போது மக்கள் படும் இன்னல்கள் தொடர்பாகப் பேச ஆரம்பித்துள்ளார் எனவும் அவர் தெரிவித்தார். குற்றவியல் நடைமுறைச் சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். பிரதமராக ரணில் விக்ரமசிங்கவும், சுகாதார அமைச்சராக ராஜித சேனாரத்னவும் இருந்த போது சுகாதாரத் துறையில் நிலவும் சம்பள முரண்பாடுகள் தொடர்பாக ஏன் பேசவில்லை எனவும் அமைச்சர் கேள்வி யெழுப்பி யுள்ளார். தொற்று நோய் பரவும் பட்சத்தில் மக்களைப் பணயம் வைத்து வேலைநிறுத்தம் நடத்துவது நியாயமில்லை என்று கூறிய அமைச்சர், எதிர்க்கட்சிகள் அரசுக்கு எதிரான அலையை உருவாக்கும் நோக்கத்தில் இருக்கின்றன எனவும் தெரிவித்தார். எவ்வாறாயினும், பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று ஒரு பெண் தொலைக்காட்சியில் கூறியதை பார்த்தார் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# காரைநகர் – ஊர்காவற்துறை பாதை பழுதடைந்தமையால் பயணிகள் அவதி!



காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையிலான பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பாதை கடந்த மூன்று தினங்களாக சேவையில் ஈடு படாமையால் பெரும் இடர்பாடுகள் எதிர்நோக்கப்படு கின்றன.

குறிப்பாக, ஊர் காவற்றுறை பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை நீதிமன்று, ஊர்காவற்றுறை ஆதார வைத்திய சாலை போன்றவற்றில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

பாதையின் வெளியிணைப்பு இயந்தி ரம் பழுதடைந்துள்ளமையாலேயே சேவை நிறுத்தப் பட்டுள்ளது என காரணம் கூறப்பட்டுள்ளது.

மேற்படி பாதையில் கேபிள் அறுந்து போதல், வெளியிணைப்பு இயந்தி ரம் பழுதடைதல் போன்ற சம்பவங்கள் கடந்த காலங்களில் அடிக்கடி இடம்பெற்றன.

எனினும், பின்னர் புதிய கேபிள் இணைக்கப்பட்டு அண்மைக்காலமாக தடையின்றி சேவை இடம்பெற்றது.

இரு வெளியிணைப்பு இயந்திரங்கள் பயன்படுத்தப் பட்டு, ஒன்று பழுதடைந்தால் மற்றையதை பயன்படுத்தும் நடைமுறை பின்பற்றப்பட்டது.

ஆனால், தற்போது பொருத்தப்பட்டிருந்த ஒரு வெளியிணைப்பு இயந்திரம் பழுதடைந்துள்ளது எனக் கூறி மூன்று தினங்களாக பாதை சேவையில் ஈடுபடாமல் உள்ளது. அரச உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் தற் காலிகமாக ஒழுங்குபடுத்தப்பட்ட மோட்டார் படகில் ஆபத்துக்களுக்கு மத்தியில் தினமும் பயணம் செய்கின்றனர். எனவே, பாதையின் சீரான சேவைக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

காரைநகரில் இருந்து 5 நிமிடங்களில் பாதையில் ஊர்காவற்துறைக்கு செல்ல கூடியவர்கள் குறித்த பாதை சேவை தடைப்பட்டு இருப்பதால், காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்துறைக்கு செல்ல வேண்டும்.

இதனால் அவர்கள் சுமார் 45 கிலோ மீற்றர் தூரம் சுற்றி செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரபல ஜோதிடரிடம் கோடிக்கணக்கான ரூபாக்களை திருடிச்சென்றார் மனைவி

நாட்டு மக்களுக்கே ஜோதிடம் சொல்லும் பிரபல ஜோதிடர் ஒருவரிடமிருந்து அவரது மனைவி கோடிக்காணக்கான சொத்துக்களைக் திருடியுள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் முல்லேரியா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பிரபல ஜோதிடர் ஒருவரின் மனைவி இரண்டு கோடி ரூபா பெறுமதியான சொத்துக் களை திருடிச் சென்ற சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனக் கொழும்பு மேலதிக நீதிவானிடம் முல்லேரியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

47 பவுண் எடையுடைய தங்கம் மற்றும் 140 லட்சம் ரூபா பெறுமதியான பணம் என்பன வற்றை குறித்த பெண் திருடிச் சென்றுள்ளார் எனவும் இரண்டு பிள்ளைகளையும் தன்னுடன் அழைத்துச் சென்றுள்ளார் எனவும் தெரிவிக் கப்படுகின்றது.

இரண்டரை வயது மற்றும் ஒன்றரை வயதான பிள்ளைகளையும் தமது மனைவி அழைத்துச் சென்றுள்ளார் என ஜோதிடர் முறைப்பாடு செய்துள்ளார்.

எனினும், கணவரின் சொத்துக்களை எடுத்துச் செல்லவும் பிள்ளைகளை அழைத்துச் செல்லவும் மனைவிக்கு உரிமை உண்டு என நீதிவான் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி பெண்ணின் வெளிநாட்டு பயணத்தை தடை செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என ஜோதிடர் தரப்பில் முன் வைக்கப்பட்ட கோரிக்கையை நீதிவான் நிராகரித்துள்ளார்.

## யானையை தொந்தரவு செய்தவருக்கு 2 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது

யானையொன்றை தொந்தரவு செய்த நபருக்கு நீதிமன்றம் இரண்டு லட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

திருகோணமலை-ஹபரண வீதியில் சஞ்சரித்த யானையொன்றை கெப் ரக வாகனமொன்றில் பின்தொடர்ந்து சென்று தொந்தரவு செய்த நபருக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நபரைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்.

இந்த வழக்கை விசாரணை செய்த கெக்கிராவ மாவட்ட நீதிவான் சமன் வெரனியகொட, குறித்த நபருக்கு இரண்டு லட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

ரசிக கிம்ஹான் தனஞ்சய ராஜசிங்க என்ற நபருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

## வீட்டில் திருடிய குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறை இளைஞர் கைது

**ஊர்காவற்துறையில் நகைகள், கோழி என்பவற்றை திருடிய குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.**

சுருவில் மாதா பகுதியில் உள்ள வீடொன்றினுள் கடந்த புதன்கிழமை புகுந்த திருடன் 48 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் 1500 ரூபா பெறுமதியான சேவல் ஒன்று என்பன வற்றை களவாடி சென்றுள்ளான்.

குறித்த திருட்டு சம்பவம் தொடர்பில் உரிமையாளரால் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அப்பகுதியை சேர்ந்த 21 வயதுடைய நபர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

## பஸில் ராஜபக்ஷவுக்கு ஜோன்ஸ்டன் புகழாரம்!



நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இரு நாள்கள் விவாதம் கோரியது டன், நிதி அமைச்சர் தொடர்பிலும் குற்றச்சாட்டை முன்வைத்தார். ஜனவரி முதலாம் திகதி நாடு வங்குரோத் தடையும், இது தொடர்பில் நேரலையில் வந்து தக வல் வெளியிடப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதார வல்லுநர்கள் எனக் கூறிக்கொள்பவர்கள் சுட்டிக் காட்டினர். தூரநோக்கு சிந்தனையின்றி, தற்காலிக மகிழ்ச்சிக்காகவே அவர்கள் இவ்வாறு கருத்து வெளியிடு கின்றனர் என்பது தற்போது உறுதியாகியுள்ளது.

நாட்டில் பொரு ளாதாரம் விழுவதற்கு நாம் இடமளிக்க மாட்டோம். நிதி அமைச்சர் சிறப்பாகச் செயற்படுகின்றார். அவர் நிதி அமைச்சை திறமையாக வழி நடத்துகின்றார். – என்றார்.

’நாட்டின் பொருளாதாரம் வீழ்வதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மிகவும் சிறப்பாகச் செயற்படுகின்றார். அவர் திறமையுடன் நிதி அமைச்சை வழி நடத்துகின்றார் என ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்லவால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கு பதிலடி கொடுக்கும் விதத்திலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

## தமிழ்ப் பெண்களின் ஆடைகளை விமர்சித்த முபாரக் அப்துல் மஜீத்!

தமிழ் பெண்களின் ஆடைகளை மிகவும் மோசமான முறையில் மௌலவி முபாரக் அப்துல் மஜீத் விமர்சித்துள்ளமையானது மக்கள் மத்தியில் கடும் விமர்சனங்களை தோற்றுவித்துள்ளது.

– இவ்வாறு சமூக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

கல்முனையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின் போது கருத்து வெளியிட்டிருந்த முபாரக் அப்துல் மஜீத், ’இப்பொழுது சேலை என்பது இரண்டு துணியாக மாறிவிட்டது. பின்னால் ஜன்னல் வைத்து கொள்கின்றார்கள். முன்னால் வீ வடிவில் வெட்டி விடுகின்றார்கள். இடுப்பினை காட்டுகின்ற சேலை வரை நாம் காண்கின்றோம்.

”ஆகவே இப்பொழுது இருக்கின்ற சேலை என்பது விழுமியமுள்ள ஆடையாக நாம் பார்க்க வில்லை. சேலை அணியத்தான் வேண்டும். சேலை என்பது எத்தனை முழம் என்பது எமக்கு தெரியும்.

”முன்னைய கால நாடகங்கள் நாவல்களில் சேலையுடன் வருகின்ற பெண்கள் விழுமியங்களை பாதுகாப்பவர்களாகவே இருக்கின்றனர். ஆனால் தற்போது உள்ள சேலை ஒழுக்கமில்லாதது.’ எனக் குறிப்பிட்டிருந்தார்.

திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி ஹபாயா சர்ச்சையினை வைத்து சிலர் அரசியல் ஆதாயம் தேட முனையும் இந்த சூழலில் தமிழ் பெண்களின் ஆடைகளை மிகவும் மோசமான முறையில் மௌலவி முபாரக் அப்துல் மஜீத் விமர்சித்துள்ளமையானது மக்கள் மத்தியில் கடும் விசமர்சனங்களை தோற்றுவித்துள்ளது.

அவரின் மேற்படி கருத்து தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களுக்கிடையிலான உறவில் மேலும் விரிசலை ஏற்படுத்தும் வகையில் வெளியிடப்பட்ட கருத்தாகவே அமைந்துள்ளது என சமூக ஆர்வலர்கள் பலரும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மௌலவி முபாரக் அப்துல் மஜீத் இதற்கு முன்னரும் இவ்வாறான பல்வேறு சர்ச்சைக்குரிய கருத்துக்களை பொதுவெளியில் தெரிவித்திருந்தார்.

குறிப்பாக இலங்கையின் பூர்வீக குடிகள் முஸ்லீம் என தெரிவித்து கடந்த காலத்தில் பெரும் சர்ச்சைகளை தோற்றுவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:** உக்ரெயினில் என்னதான் நடக்கிறது?

**பதில் :** இவை பற்றியெல்லாம் கேட்கக் கூட ஆளிருப்பது பற்றி ரொம்பச் சந்தோஷம்! ஊர் பற்றிய உண்மை அறிவே நம்மவரில் பலபேருக்குத் தெரிவதில்லை. இந்த இலட்சணத்தில் உலகம் பற்றிய அறிவை யார் தேடுகிறார்கள்? இதற்காகவே உங்களுக்கு ஒரு தனி வணக்கம். இனி நீங்கள் கேட்ட விடயத்திற்கு வருகிறேன்.

கிட்டத்தட்ட நம்ம ஊர்ப் பிரச்சினை போன்ற ஒன்றுதான் அங்கும் நடந்து கொண்டிருக்கிறது. வல்லரசு நாடுகளின் எல்லையில் அமைந்துவிட்ட நாடுகளுக்கு எப்போதும் தலையிடிதான். அங்ஙனம் அமைந்த நாடுகளுக்கெனத் தனி எதிரிகள் இல்லாவிட்டாலும் அருகிலிருக்கும் வல்லரசு நாடுகளின் எதிரிகள் அந்நாடுகளை நிம்மதியாய் இருக்க விடப்போவதில்லை. எங்கள் நாடும் கூட பிராந்திய வல்லரசாகக் கருதப்படும் இந்தியாவின் ஒரு முனையில் இருந்திருக்காவிட்டால் நம் பிரச்சினைகள் இந்த அளவுக்கு வளர்ந்திரா. இந்தியாவின் பகைக்கணக்கை வைத்துத்தான் நம் பிரச்சினை இந்த அளவு ஊதிப் பெருப்பிக்கப்பட்டது.

அதை விடுவோம்! இனி உங்கள் கேள்வி பற்றிப் பார்க்கலாம். முன்பு சோவியத் சோலிசக் குடியரசு இருந்தபோது, ஒன்றாய் இணைந்திருந்த நாடுகள்தான் ரஷ்யாவும் உக்ரெயினும். சோவியத் யூனியன் 1991 இல் உடைந்தபோது இவ்விரண்டு நாடுகளும் தனித்தனியாய் பிரிந்துபோயின. ரஷ்யாவின் எல்லையில் இருந்த உக்ரெயினின் பிரிவு அமெரிக்கக் கழுகை அங்கு வட்டமிட வைத்தது.

தன்னை உலகில் தனி வல்லரசாக ஆக்கவேண்டும் எனும் விருப்புக் கொண்ட அமெரிக்கா, எப்படியும் ரஷ்யாவின் எல்லைக்குள்ளும் தன் மூக்கை நீட்ட விரும்புகிறது. அதனால் ஏதேதோ சூழ்ச்சிகள் செய்து, ரஷ்ய ஆதரவாளர்களாய் இருந்த உக்ரெயின் ஆட்சியாளர்களை வீழ்த்தித் தன் ஆதரவாளரான ஒருவரை அங்கு ஆட்சிக்குக் கொண்டுவந்துவிட்டது. பின்னர் அவரைக் கொண்டு உக்ரெயினைத் தனது நட்புக் கூட்டணியான நேட்டோவுக்குள் உள்ளீர்க்க அது தயாரானது. இங்கு நேட்டோ அமைப்புப் பற்றி ஒரு சில விடயங்களைச் சொல்லவேண்டும்.

பரவலாக நேட்டோ (NATO) என அறியப்படும் வட அத்திலாந்திய ஒப்பந்த அமைப்பு (North Atlantic Treaty Organizations) என்பது, 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 ஆம் திகதி வட அத்திலாந்திய ஒப்பந்தம் கையெழுத்தானதன் மூலம் உருவான ஓர் இராணுவக் கூட்டணி ஆகும். தற்போது இக்கூட்டணியில் 30 நாடுகள் உள்ளன. இதன் தலைமையகம் பெல்ஜியத்தின் தலைநகரமான பிரஸல்ஸில் உள்ளது. வெளியார் தாக்குதலுக்கு எதிராகப் பரஸ்பர பாதுகாப்பு உதவி வழங்குவதற்கு இதிலுள்ள உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் இணங்கியதன் மூலம் இவ்வமைப்பு ஓர் கூட்டுப் பாதுகாப்பு முறையைக் கொண்டுள்ளது.

இப்போது உங்களுக்கு உக்ரெயினை நேட்டோவுக்குள் இழுக்க நினைக்கும் அமெரிக்காவின் ஆர்வத்தின் காரணம் புரிந்திருக்கும். உக்ரெயினை நேட்டோவின் உறுப்பு நாடாக்கிவிட்டால், அதை எதிர்க்க ரஷ்யா முற்படுகிறபொழுது அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து ரஷ்யாவைத் தாக்கலாம் என்பதுதான் அமெரிக்காவின் திட்டம்.

சற்றுத் தாமதமாய் விழித்துக் கொண்ட ரஷ்யா, அமெரிக்காவின் இம் முயற்சியைத் தடுக்க தனது படைபலம் கொண்டு உக்ரெயினை மிரட்டத் தொடங்கியிருக்கிறது. உக்ரெயின் எல்லையில் ஒரு லட்சத்து இருபத்தையாயிரத்திற்கு மேற்பட்ட தனது படைவீரர்களை நிறுத்தியதோடு நவீன ஆயுதங்களையும் அங்கு அது குவித்து வருகிறது. ரஷ்யாவுக்குப் போட்டியாக உக்ரெயினுக்கு ஆதரவு தெரிவித்து அமெரிக்காவும் அங்கு தன் படைகளை அனுப்பத் தொடங்கியிருக்கிறது. இதனால் உலகில் ஒரு பெரும் போர் மூண்டுவிடலாமோ எனும் அச்சம் உலக சமுதாயத்தின் மத்தியில் தோன்றியிருக்கிறது.

உலகம் முழுவதும் நாடுகளுக்கு நாடுகள் நாளாந்தம் பகை முற்றிக்கொண்டுதான் இருக்கிறது. அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. உலக யுத்தம் வெடிப்பதானால் அது எப்போதோ வெடித்திருக்க வேண்டும். வெடிக்காததற்கான காரணம், முன்னைய உலக யுத்தங்கள் தந்த அனுபவங்களால் விளைந்த பயம்தான். நடந்து முடிந்த உலக யுத்தங்களின் போது பல வல்லரசு நாடுகள் கீழிறங்கியமையும், கீழிருந்த நாடுகள் வல்லரசானமையும் நடந்திருக்கின்றன. அத்தகைய சூழ்நிலை இன்றும் ஏற்பட்டுவிடலாம் என்று வல்லரசு நாடுகள் உள்ளிட்ட மற்றைய நாடுகளும் அஞ்சுகின்றன. அந்த விப் பரீட்சைக்கு ஒரு நாடும் இப்போது முழுமையாய்த் தயாராயில்லை. அதனால்தான் மூன்றாம் உலகயுத்தம் இன்னும் தள்ளிப் போய்க் கொண்டேயிருக்கிறது.

இந்நிலையில் உக்ரெயினில் யுத்தம் வெடிப்பதற்கான வாய்ப்புகள் பெரும்பாலும் குறைவென்றே கருதுகிறேன். அதை மீறி யுத்தம் வெடித்தால் இரண்டு முடிவுகள் வரலாம். ஒன்று உக்ரெயினைத் தன்வயப்படுத்தி ரஷ்யா பழையபடி முன்பு போல பலம் பெற்ற நாடாக மாறக்கூடும். அல்லது சிலவேளை மூன்றாம் உலக யுத்தம் வெடித்து உலகம் முழுவதும் நாசமாகவும் கூடும். என்ன நடக்கப் போகிறதென்பது ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ வாரிதியார் மிரட்டுறாருங்கோ!

**2. கேள்வி:** ஏதோ கேள்விக்குப் புத்தசாலித்தனமாய்ப் பதில் சொல்வதாய் நினைந்து வடகொரியாவிடமிருந்து கறுப்புப் பணத்தில் போருக்கான ஆயுதங்கள் வாங்கியதாய்ச் சொல்லப்போய் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றவர்களிடம் எக்கச்சக்கமாக மாட்டிக்கொண்டாரே பார்த்தீர்களா?

**பதில் :** பார்த்தேன். அதுதான் இயற்கையின் சக்தி. ‘நன்மையும் தீமையன்றோ நாசம் வந்துற்ற காலை’ என்று கம்பன் தன் காவியத்தில் பதிவு செய்த செய்தி



எத்துணை உண்மையானது என்று தெரியவந்திருக்கிறது. ஊழினால் நன்மையும் நடக்கும், தீமையும் நடக்கும் என்கிறார்கள். நன்மை தருகிற ஊழை ‘ஆகூழ்’ என்றும், தீமை தருகிற ஊழினை ‘போகூழ்’ என்றும் நூல்கள் பேசுகின்றன. நம் அரசுக்கு இப்பொழுது போகூழ் நடக்கிறது. அதனால்த்தான் அவர்கள் நல்லது என்று நினைத்துச் செய்யத் தொடங்குகிற காரியங்கள் எல்லாம் அடுத்தடுத்துத் தீமையாக முடிந்து கொண்டிருக்கின்றன.

அதில் ஒன்றுதான் நிதியமைச்சரின் அறிக்கையும். தாங்கள் தியாகம் செய்து போரை வென்றனர் என, சிங்கள மக்கள் மனதில் அனுதாபம் உருவாக்கவென அவர் சொன்ன மேற்செய்தி, இப்பொழுது அரசைச் சங்கடத்திற்கு ஆளாக்கி இருக்கிறது. உலக அளவிலும் இச்செய்தியால் இலங்கை அரசு பிரச்சினைப்படப் போகிறது. பெரும்பான்மையான உலகநாடுகளால் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் வடகொரியாவிடம் ரகசியமாக ஆயுதம் வாங்கிய செய்தியைப் பகிரங்கப்படுத்தி, உலக நாடுகளின் எதிர்ப்புக்கு இலங்கையை ஆளாக்கியிருக்கிறார் நிதியமைச்சர். ’பத்தைக்குள் எறிய முயல் வெளிக் கிட்ட கதை’ என்பது இதனைத்தான். இன் னும் எத்தனை முயல்கள் வெளிக்கிடப் போகின்றனவோ. யாரறிவார்?

உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ எங்க இருந்துதான் இந்த ஊர்ப்பழமொழிகள் வாரிதியார் பிடிக்கிறாரோ தெரியேல. பழமொழி சூ..சூ...சூப்பர்...!

**3. கேள்வி:** இந்திய மீனவர்களதும் தமிழ்நாட்டு ஆட்சியாளர்களதும் எதிர்ப்பை மீறி, கைப்பற்றிய இந்திய மீனவர்களின் படகுகளை ஏலத்தில் விற்று அதில் கிடைக்கும் தொகையை நம் மீனவர்களுக்குக் கொடுக்க அமைச்சர் டக்ளஸ் முடிவு செய்திருக்கிறாரே!

**பதில் :** துணிவான முடிவுதான். சரியான முடிவும்கூட! என்ன ஒன்று, இம்முடிவைக் கொஞ்ச நாள்களுக்கு முன்பே எடுத்திருக்கலாம். இப்போது விற்கப்பட்டிருப்பது இந்தியப் படகுகளின் எலும்புக்கூடுகள் தானாம்! கடல் காற்றில் அவை அனைத்தும் உக்கிப்போய் விட்டன எனச் சொல்கிறார்கள். அது கிடக்க, இந்திய அரசின் அதிருப்தி வரும் என்று தெரிந்தும், இம் முடிவைச் செயற்படுத்தத் துணிந்திருக்கும் அமைச்சரைப் பாராட்டத்தான் வேண்டும். இந்திய அரசின் பகை ஆபத்தானது என்பதை டக்ளஸ் மறந்து விடக்கூடாது. மத்திய, மாநில அரசுகளுக்கு அங்குள்ள மீனவர்களின் அத்துமீறல் அநியாயங்களை எடுத்துச் சொல்லி, ஏலம் விடும் இக்காரியத்தின் நியாயப்பாட்டை அவர் தெளிவு படுத்தவேண்டும். இத்துணிகரமான செயல் மூலம் நமது மீனவர்களின் கொதிப்பை ஓரளவு தணிய வைத்திருக்கிறார் அமைச்சர்.

உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ கடல் மேல் பிறக்க வைத்தான் எங்களைக் கண்ணீரில் மிதக்க வைத்தான்...!

**4. கேள்வி** திருக்குறளில் வரும் புலால்மறுத்தல் அதிகாரத்திற்கும், கொல்லாமை அதிகாரத்திற்கும் என்னையா வித்தியாசம்?

**பதில் :** வித்தியாசம் இருக்கிறது. தன் உணவுத் தேவைக்காக இன்னொரு உயிரைக் கொல்லாமல் இருப்பது புலால் மறுத்தல். எந்தத் தேவைக்காகவும் ஓர் உயிரைக் கொல்லாமல் ஜீவகாருண்யம் காப்பது கொல்லாமை. துறவின் ஆரம்ப நிலையில் இருப்போர்கள் பற்றவேண்டிய விரதம் புலால் மறுத்தல். இறுதி நிலைக்கு வந்தோர் பற்றவேண்டிய விரதம் கொல்லாமை. இதுதான் அவ்விரண்டுக்குமான வித்தியாசம்.

உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ நித்தியானந்தா இந்த இரண்டு விரதத்தில் எதைக் கடைப்பிடிக்கிறாராம்? ச்சும்மா ஒரு விளையாட்டுக்குங்கோ!

**5. கேள்வி:** யாழ். மீனவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தின்போது கேட்கப்பட்ட கேள்விகளால் கோபப்பட்டு, துள்ளிக் குதித்து வெளியேறிய அமைச்சர் டக்ளஸின் செயல் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :** டக்ளஸ் பல விடயங்களில் ஒரு தேர்ந்த அரசியல்வாதி ஆகிவிட்டார் என்பதை அவரது எதிரிகளும் ஒத்துக் கொள்வார்கள்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா பல்கலைக்கழகத்தின் ஊடாக தொழிநுட்ப சவால்களை முறியடிப்போம்!

## ஜனாதிபதி கோட்டா திடசங்கற்பம்



வவுனியா பல்கலைக்கழகம் ஊடாக தொழில்நுட்ப சவால்களை முறியடிப்போம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வவுனியா பல்கலைக்கழகத்தை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

இது ஒரு விசேமான நாள். சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்துக்கு அமைய இந்தப் பிரதேசத்தைக் கல்விப் பொருளாதார ரீதியில் உயர்வடைய இந்த வவுனியா பல்கலைக்கழகம் திறந்து வைக்கப்படுகிறது.

எனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டமை போல நாட்டில் புதிய பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டு இந்த பிரதேச மாணவர்களிடம் கையளிக்கப்படுவதில் பெருமையடைகிறேன்.

இந்தப் பல்கலைகழகம் ஊடாக இளமானி பட்டங்களை மட்டுமல்ல மேலதிக பட்டங்களையும், வேலை வாய்ப்புகளையும், வெளிநாட்டு வாய்ப்புகளையும் உருவாக்கி எமது இளைய சமுதாயத்துக்குப் பெற்றுக் கொடுக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுத்து செல்லத் தயாராக வேண்டும்.

இந்தப் பல்கலை கழகம் ஊடாகத் தொழில் நுட்ப சவால்களை முறியடித்து நாம் முன்னோக்கி செல்ல வேண்டும். எதிர்வரும் காலங்களில் எமது நாட்டில் தொழில் வாய்ப்புகளை உருவாக்கக் கூடிய கல்வி முறைகளை நாம் உருவாக்க அயராது உழைக்க வேண்டும்.

எமது நாடு விவசாய நாடு என்பதால் எதிர்காலத்தில் விவசாய துறையில் பாடத் திட்டங்களை உருவாக்கி அவற்றில் பட்டங்களைப் பெற்று கொடுத்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புகளை பெற்றுகொடுக்க பல்கலைக் கழகங்கள் முன்வர வேண்டும்.

எதிர் காலத்தில் மிக அதிகளவான மாணவர்களை பல்கலை கழகங்களுக்கு உள்ளீர்க்க எதிர்பார்த்து இருக்கிறோம். அதிகளவான மாணவர்கள் உயர்தரத்திலே சித்தியடைந்தாலும் அனைவரையும் பல்கலைகழகங்களுக்கு உள்ளீர்க்க முடியவில்லை. எதிர்காலத்தில் இந்த நிலைமை மாற்றியமைக்கப்படும்.

பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பு கற்கை நெறிகளுக்கு மேலதிகமாக டிப்ளோமா, சான்றிதழ் கற்கை நெறிகள் புதிது புதிதாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். – எனத் தெரிவித்துள்ளார்.

## 2 கிலோ கிராம் ஐஸ் போதையுடன் வத்தளையில் ஒருவர் கைதாகினார்!

ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டு தொடர்பில் வத்தளை பிரதேசத்தில் வைத்து ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இரண்டு கிலோ மற்றும் 579 கிராம் போதைப்பொருளை வைத்திருந்தமை தொடர்பிலேயே அவர் கைதுசெய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 51 வயதானவர் என்றும் வத்தளை பிரதேசத்தை சேர்ந்தவர் என்றும் தெரியவந்துள்ளது.

பேலியகொட குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்ட சோதனையின் போதே இந்த போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டவர் வத்தளை பொலிஸில் விசாரணைக்காகக் கையளிக்கப்பட்டுள்ளார்.

## போலித் தடுப்பூசி அட்டைகளை பாவிப்போருக்கு எச்சரிக்கை!

போலி தடுப்பூசி அட்டைகளைப் பயன்படுத்துவோருக்கு இலங்கை சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தடுப்பூசி பெற்றுக்கொண்ட அனைவரது தகவல்களும் சுகாதார அமைச்சகத்திடம் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தடுப்பூசி பெற்றுக்கொள்வதை தவிர்ப்பது ஒரு பயனற்ற முயற்சி எனவும் வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

மேலும் தடுப்பூசி பெற்றுக்கொள்வது ஒரு சமூகப் பொறுப்பாகும், எனவே அனைவரும் கொரோனா தடுப்பூசியை பெற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஒருவரின் பெயரில் பல சிம் காட்கள் புதிய சட்டம் உருவாக்க அரசு முடிவு

பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், சிம் அட்டைகளை பதிவு செய்வதை ஒழுங்குபடுத்தும் வகையில் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவது தொடர்பாக அரசு ஆலோசித்து வருவதாக பொது பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நீதியமைச்சர் அலி சப்ரி மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போது இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

சில நேரங்களில், ஒரு நபரின் பெயரில் பல சிம் அட்டைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சிலருக்குத் தங்கள் பெயரில் பதிவு செய்யப்பட்ட சிம் அட்டைகள் இருக்கின்றமை கூடத் தெரியாது. இறந்த நபர்களின் கீழ் சிம் அட்டைகள் பதிவு செய்யப்பட்ட நிகழ்வுகள் உள்ளன.

எனவே, சிம் அட்டைகளை பதிவு செய்வதை ஒழுங்குபடுத்துவதற்கு புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எனவே உரிமையாளரின் அடையாளத்தை நேரடியாக அங்கீகரிக்க முடியும் என்று பொது பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையின் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பல பகுதிகளில் அடையாளம் காணப்பட்ட சட்டங்களை உருவாக்குதல் மற்றும் புதுப்பித்தல் தொடர்பான கூட்டம் நடைபெற்றது.

பொது பாதுகாப்பு அமைச்சின் கூற்றுப்படி, கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் மாதிரிகளின் கையிருப்புகளை அழிக்க வேண்டிய சட்டங்களை இயற்றுவது தொடர்பில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது. புதிய சொத்துச் சட்டங்களை இயற்றுவது மற்றும் பணமோசடி சட்டத்தை வலுப்படுத்துவது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது. மேலும், போதைப் பொருள் தொடர்பான தற்போதைய சட்டங்கள் போதுமானவையாக இல்லாததால், அது தொடர்பான சட்டங்களை முறையாகத் திருத்த வேண்டிய அவசியம் உள்ளது.

குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவது பற்றியும் அமைச்சர்கள் விவாதித்தனர்.

மேலும், போதைப்பொருள் சோதனைகள் நடத்தப்படும் போது, பொலிஸ் வெகுமதி நிதியின் பண சதவீதத்தை அதிகரிப்பது தொடர்பிலும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

## பாட்டும் நானே? ....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதுமட்டுமல்லாமல் நிர்வாகத்திறனிலும் அவர் நிறையத் தேர்ச்சி பெற்றுவிட்டார் என்பது உண்மையே! ஆனாலும் சில விடயங்களில் அவரது செயற்பாடுகள் கவலை தரவே செய்கின்றன. நாடாளுமன்றில் கூட்டமைப்பினரை எதிர்ப்பதாய் நினைந்து அவர் பேசுகிற பேச்சுக்கள் சில, அவரை கூட்டமைப்பினரின் எதிரியாய் மட்டும் இல்லாமல், தமிழ் மக்களின் விரோதி போலவும் காட்டிவிடுகின்றன. உணர்ச்சி வயப்பாட்டில் இறந்துபோன போராளிகளையும் அவர் கீழ்மைப்படுத்திப் பேசுவது அவரது வெறுப்பாளர்கள் பட்டியலை நீளச்



செய்கின்றது. இவற்றை அவர் தவிர்த்து விடலாம் என்பது என் அபிப்பிராயம்.

அன்றைய கூட்டத்தில் அனுபவமுள்ள அவர் பொதுமக்களோடு நடந்து கொண்ட விதம் ஆச்சரியம் தந்தது. அவர் இன்னும் சற்று நிதானத்துடன் நடந்திருக்கலாம். அன்று உணர்ச்சிவயப்பட்ட மக்களின் முன் பேச்சுக்கு அவர் போயிருக்கவே கூடாது. பொதுமக்களின் பிரதிநிதிகளைத் தனியே அழைத்துப் பேசியிருக்க வேண்டும். அவசரப்பட்டுப் பொது மக்களின் முன்சென்றது முதல் பிழை. அங்கு பொறுமையிழந்து கோபப்பட்டது இரண்டாவது பிழை.

சுக்கிரீவனுக்கு ஆட்சியைக் கொடுத்த போது இராமன் அவனுக்கு சில நிர்வாக ஆலோசனைகளை வழங்குகிறான். அந்த ஆலோசனைகளில் ஒன்றாய், எதிர்க்கருத்துடையவர்களை எப்படிச் சந்திப்பது என்பது பற்றியும் சொல்கிறான். பகை உள்ளவர்கள் வந்தால் எந்தவித உணர்ச்சிகளையும் காட்டாமல் முகத்தில் புன்னகையைப் பூட்டிக் கொண்டு இனிய வார்த்தைகளால் அவர்களை எதிர்கொள்ள வேண்டும் என்கிறான் அவன். 'பகையுடைச் சிந்தையார்க்கும் பகையுறு பண்பில் மாறா நகையுடை முகத்தை யாகி இன்னுரை நல்கு நாவால்' என்பது மேற் செய்தியைச் சொல்லும் கம்பரது பாடலடி.

இப்பாடலடியில் கம்பர் செய்த ஓர் நுட்பமும் இருக்கிறது. பகையுடையவர்களோடு எப்படி இனிமையாய்ப் பேசுவது? என்று கேள்வி பிறக்கும். அதற்குப் பதிலாக, கம்பர் அத்தகையவர்களோடு நீ மனதிலிருந்து பேசத் தேவையில்லை. வெறுமனே வாயிலிருந்து பேசினாலே போதும் என்கிறார். இக்கருத்தைக் குறிப்பதற்காகவே கம்பர் நாவால் என்று பாடலடியை முடித்திருக்கிறார் என்கிறார்கள் அறிஞர்கள்.

உலகநாதரின் ஒப்பீனியன் * கம்பர் இதையெல்லாம் கூடச் சொல்லித் தருகிறாரா? கம்பவாரிதியின் பலத்தின் ஊற்றுக்கண் இப்போது தெரிகிறது.

## தமிழக மீனவர்கள் 9 பேர் மீண்டும் நாடு திரும்பினர்!

இலங்கையில் தடுவைக்கப்பட்டிருந்த நிலையில் விடுதலையான 56 தமிழக மீனவர்களில் 9 பேர் இந்தியாவிற்கு திரும்பியுள்ளனர்.

இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 6 பேரும், ஜெகதாபட்டினம் பகுதியை சேர்ந்த 3 பேருமே இவ்வாறு இந்தியாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கொரோனாப் பரவல் காரணமாகத் தாமதம் ஏற்பட்ட நிலையில் 9 மீனவர்களும் தற்போது சொந்த ஊர் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

## எங்களுக்கு நடக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பின் நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஜனாதிபதி பல்கலைக்கழகத்தைத் திறந்து வைப்பதற்காக வந்துள்ளார். நாம் இதுவரை காலமும் எமது உறவுகளைத் தேடி தெருவில் நின்று 13 வருடங்களாகப் போராடி வருகின்றோம். கையில் ஒப்படைக்கப்பட்ட உறவுகளையே தேடுகின்றோம். இந்த நாட்டில் நீதி மறுக்கப்பட்டபோதும் நாம் சர்வதேசத்தை நோக்கித்தான் நீதிக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

கொலைக் குற்றவாளியாக இருந்தவர் தற்போது இந்த நாட்டின் ஜனாதிபதியாக வந்து வவுனியாவில் உள்ள பல்கலைக் கழகத்தைத் திறந்து வைக்கின்றார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதற்கு இருக்கின்றார்கள். எமது பகுதியில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய நிலையில் சிங்கள மொழிக்கு முன்னுரிமை கொடுத்துப் பெயர்ப்பலகையை மாற்றியுள்ளார்கள். அப்படியானவற்றை தட்டிக் கேட்க வேண்டியவர்கள் அமைதியாக இருக்கின்றார்கள்.

எமது உறவுகள் இதுவரை நீதிக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். இதுவரை நீதி கிடைக்கவில்லை. அதனால் ஜனாதிபதி இங்கு வந்தபோது நாம் எதிர்ப்பைக் காட்டுகின்றோம். நான் வீட்டிலிருந்து வெளியேறி இங்கு வரும் வரை அரச புலனாய்வுத் துறையினர் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தார்கள். எமது உறவுகளை அங்கும் இங்குமாக மறித்து ஒன்றுசேர விடாது தடுத்துள்ளார்கள். அப்படியான நிலையிலும் நாம் இங்கு வந்துள்ளோம். நாம் ஜனாதிபதியுடன் கதைக்க வரவில்லை.

ஜனாதிபதியிடம் நான்கு கேள்விகள் கேட்க வேண்டும். கொலையைச் செய்த குற்றவாளி ஜனாதிபதியாக இருக்கின்றார். மக்களை ஏமாற்றித்தான் செயற்படுகிறார்கள். எமக்கு நீதி மறுக்கப்பட்டுள்ளது. எனவே, சர்வதேசம் இந்த நாட்டு ஜனாதிபதியை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் ஏற்றி நீதியைப் பெற்றுத்தர வேண்டும். இதனை வலியுறுத்தி நாம் பல வருடங்களாகப் போராடுகின்றோம்.

இந்த மண்ணில் எமக்கு நீதியைப் பெறக் கருத்துச் சுதந்திரத்தைக் கூட பரிமாற முடியவில்லை. எம்மை மிகவும் வேனைக்குரியதாக நடத்துகின்றார்கள். கொரோனாவைப் பொருட்படுத்தாமல் நாம் செத்தாலும் பரவாயில்லை. எமது உறவுகள்தான் வேண்டும் எனப் போராடுகின்றோம். எமக்கு நடக்கும் அநீதியை நாடாளுமன்ற உறுப்பினர்களும், மக்களும் திரும்பிப் பாருங்கள். எமக்கான பாதைகள் மறிக்கப்படுகின்றன. அரச புலனாய்வாளர்கள் அச்சுறுத்துகின்றார்கள். எமது உறவுகளுக்காகவே போராடுகின்றோம். மார்ச்சில் நடைபெறும் ஐ.நா. கூட்டத்திலாவது சர்வதேசம் நீதியைப் பெற்றுத்தர வேண்டும். நாம் இழப்பீட்டையோ அல்லது மரணச் சான்றிதழையோ கோரவில்லை. நீதியே வேண்டும் – என்றார்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிரடிப்படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு பம்பைமடு சோதனைச் சாவடிப்பகுதியில்வைத்துபல்கலைக்கழப் பகுதிக்குச் செல்ல முடியாதவாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பொலிஸ் தடுப்பை உடைத்து செல்ல முற்பட்டமையால் அந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

இதன்போது, காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி வேண்டும், போர்க்குற்றவாளியை சர்வதேச நீதிமன்றில் நிறுத்து, சர்வதேச விசாரணையே தேவை என அவர்கள் கோஷம் எழுப்பியமையுடன், பொலிஸாருடன் கடும் தர்க்கத்திலும் ஈடுபட்டனர்.

எமது உறவுகள் காணாமல்போகவில்லை. காணாமல் ஆக்கப்பட்டார்கள். நாங்கள் இந்த நாட்டின் பிரஜை இல்லையா? நடமாடுவதற்கான சுதந்திரம் எமக்கில்லையா? எங்களை மட்டும் எப்போதுமே எதற்காகத் தடுக்கின்றீர்கள்? நாங்கள் பயங்கரவாதிகளா? எமக்கு எப்போதுமே கம்பிவேலி பிரயோகம்தானா? என்று பொலிஸாரைப் பார்த்து அவர்கள் கேள்வி எழுப்பினர்.

கொலைக்குற்றவாளியே நாட்டின் ஜனாதிபதியாக இருக்கிறார். அவர்களை நம்பியே நாம் எமது பிள்ளைகளை ஒப்படைத்தோம். எனவே, ஜனாதிபதியிடம் நாம் சில கேள்விகளை கேட்கவேண்டும். அதற்கு அனுமதி வழங்குங்கள் என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தபோதும் அதனைப் பொருள்படுத்தாத பொலிஸார் அவர்களை முன்செல்ல அனுமதிக்கவில்லை. இதனால் குறித்த பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டிருந்தது.

இதையடுத்து ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவின் அதிகாரி ஒருவர் வருகை தந்து, குறித்த போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடியமையுடன், இருவரை மாத்திரம் வந்து ஜனாதிபதியைச் சந்திக்குமாறு கோரினர். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த அவர்கள், நாம் அவரைச் சந்திக்க வரவில்லை. எங்கள் அனைவரையும் முன்செல்ல அனுமதிக்குமாறு கோரியதுடன், கொலைக்குற்றவாளி எப்படி நீதிபதியாக மாற முடியும் என்றனர்.

இருமணி நேரத்துக்கும் மேலாக குறித்த பகுதியில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் அவர்களை வழிமறித்து முன்செல்ல முடியாதவாறாக நின்றனர். இந்நிலையில், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கதறி அழுது கோமிட்டனர். அதில் ஒருவர் மயங்கி விழுந்ததையடுத்து அவர்கள் அங்கிருந்து வெளியேறி சென்றிருந்தனர்.

## அந்நியச் செலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்நியச் செலாவணி பற்றாக்குறையால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய அழுத்தங்களைக் குறைப்பதே அரசின் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தியாவசியப் பொருள்களைத் தட்டுப்பாடின்றி நுகர்வோருக்கு விநியோகிப்பதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு, முதல் தடவையாக நிதி அமைச்சில் நேற்றுக் கூடியது.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் ஆடைகள் மற்றும் உணவுப்பொருள்களை எவ்வித தட்டுப்பாடும் இன்றி மக்களுக்கு பெற்றுக்கொடுப்பது தொடர்பில் இதன் போது அதிக கவனம் செலுத்தப்பட்டது.

பால் மா, எரிவாயு, கோதுமை மற்றும் சீமெந்துக்கு ஓரளவு தட்டுப்பாடு காணப்பட்டாலும் ஏனைய அத்தியாவசியப் பொருள்கள் போதுமானளவு இருக்கின்றன என்று நிதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்களுக்காக அரசால் வழங்கப்படும் நிவாரணங்கள், நுகர்வோருக்கு உரிய முறையில் கிடைக்காமை தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சில வர்த்தகர்கள் அரசிடமிருந்து சலுகை விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்து, அதிக விலைக்கு விற்பனை செய்கின்றமையும் கூட்டத்தின்போது வெளக்கொணரப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருள்களை உரிய முறையில் நுகர்வோருக்குப் பெற்றுக்கொடுக்கும் பொறிமுறையை வெளப்படைத் தன்மையுடன் செயற்படுத்துவது குறித்தும் இந்தக் கூட்டத்தின்போது ஆராயப்பட்டுள்ளது.

## தமிழ்த் தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொள்ளும் கருத்தரங்கு இன்று காலை 9.30 மணிக்கு யாழ். நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறுவதாக இருந்த நிலையிலேயே கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

கருத்தரங்கு பின்னர் வேறொரு தினத்தில் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மக்கள் குறைகேள் சந்திப்பில் ஜனாதிபதி



(வவுனியா நிருபர்)

வவுனியாவுக்கு இன்று விஜயம் செய்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மக்கள் குறைகேள் சந்திப்பையும் மேற்கொண்டார்.

நேற்று காலை 10 மணிக்கு வவுனியா பல்கலைக் கழகத்தின் விடுதியில் அமைந்துள்ள மைதானத்தில் விசேட ஹெலியில் வந்திறங்கிய ஜனாதிபதியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், கு.திலீபன் மற்றும் ஸ்ரீலங்கா பொபதுஜன முன்னணியின் முக்கியஸ்தர் ஜனக நந்தகுமார ஆகியோர் வரவேற்றனர்.

இதையடுத்து மைதானப் பகுதிக்கு வருகை தந்திருந்த மக்களிடம் காணிப் பிரச்சினை, விவசாயப் பிரச்சனை மற்றும் அவர்களது தேவைகள், கோரிக்கைகள் தொடர்பாகவும் ஜனாதிபதி கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது மக்களது பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுடனும் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

## என் வெற்றிக்காகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்தச் சவால்களுக்கு மத்தியில் எனது வெற்றிக்காக மங்கள சமரவீர தியாகம் செய்தார்.

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர குறித்து நேற்று நாடாளுமன்றத்தில் பிரதமர் ஆற்றிய இரங்கல் உரையின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கை அரசியலில் அழியாத நினைவுகளை விட்டுச் சென்ற அரசியல்வாதியாக முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவைக் குறிப்பிடலாம்.

மங்கள சமரவீர கொழும்பு றோயல் கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும், இலண்டனில் உள்ள புனித மார்ட்டின் உயர்கல்வி நிறுவனத்தில் தனது முதல் பட்டத்தையும் முடித்த பின்னர் 1983 இல் இலங்கை திரும்பினார்.

மங்கள சமரவீர 1988 இல் மாத்தறை தொகுதிக்கு தெரிவு செய்யப்பட்டமையுடன், 1989 இல் முதன் முதலாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்.

அன்று முதல் 31 ஆண்டுகளாக அரசியலில் தீவிரமாக இருந்தார். தன் வாழ்நாளின் இறுதி வரை தனக்கே உரிய அரசியல் கொள்கையிலும் தொலை நோக்கு பார்வையிலும் நின்ற ஒரு அரசியல் பிரமுகர் என்றே சொல்லலாம்.

1989 இல் இலங்கை நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய முதல் உரையிலிருந்து 2020 பெப்ரவரியில் அவர் ஆற்றிய கடைசி உரை வரை அந்த அரசியல் தத்துவம் நன்கு விளக்கப்பட்டுள்ளது.

1988 – 1989 கலவரத்தின்போது நிலவிய அநீதிக்கு எதிராக மங்கள சமரவீர ஒரு முன்னணியை உருவாக்கினார். அதன் இணை குழுத்தலைவராகப் பணியாற்றினேன்.

1977 முதல் 1994 வரையிலான 17 ஆண்டுகால மக்களின் அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக, குறிப்பாக 1988 – 1989 பயங்கரவாதத்துக்கு எதிராகவும், நீதி மற்றும் சமூக ஜனநாயகத்துக்கான எனது போராட்டத்தின் வெற்றிக்காகவும் மங்கள சமரவீர ஆற்றிய பணியை நான் இந்தத் தருணத்தில் விசேடமாக நினைவு கூருகின்றேன்.

1994ஆம் ஆண்டு முதல் அமைச்சரவை அமைச்சராக அவர் நியமிக்கப்பட்டதில் இருந்து, பல்வேறு அரசுகளில் பல பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்துள்ளார்.

தபால் மற்றும் தொலைத்தொடர்பு, நகர அபிவிருத்தி, துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து, வெகுசன ஊடகம், வெளிவிவகாரம் மற்றும் நிதி அமைச்சர் என்ற பதவிகளை வகித்து தனக்கு வழங்கப்பட்ட பதவிகளை புதிய திசையில் கொண்டு செல்ல மங்கள சமரவீர எப்போதும் முயற்சித்தார்.

அவர் நல்லிணக்கத்தில் நம்பிக்கை கொண்ட அரசியலில் படைப்பாற்றல் மிக்க ஒருவராவார். மங்கள சமரவீர சவால்களுக்கு மத்தியிலும் தனது கருத்துக்களில் இருந்து விலகாது எப்போதும் அந்தக் கருத்துகளுக்காகவே நின்றார்.

பின்னர் அவர் சித்தாந்த ரீதியாக வேறுபட்ட அரசியல் முகாம்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும், மங்கள அவர் இறக்கும் வரை எனது தனிப்பட்ட நண்பராகவே இருந்தார்.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது, நான் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்டபோது, பல சவால்களை எதிர்கொண்டேன். அந்தச் சவால்களுக்கு மத்தியில் எனது வெற்றிக்காக மங்கள சமரவீர செய்த தியாகத்தை நான் குறிப்பிட்டாக வேண்டும்.

அவர் தனது அரசியல் வாழ்க்கையை தனது தனிப்பட்ட வாழ்க்கையுடன் பிணைத்துக்கொள்ளவில்லை.

மங்கள ஒரு கடுமையான விமர்சகர். மிகக் கூர்மையாக எதிராளியை தர்மசங்கடத்தில் ஆழ்த்தக்கூடிய பிரசாரகர் என்றும் பெயர் பெற்றவர்.

மங்கள முற்போக்குச் சித்தாந்தத்தைக் கொண்டிருந்த போதிலும், அவர் அந்த மாகாணத்தின் கலாசாரப் பின்னணியின் அடிப்படையிலேயே மாத்தறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினார் என்பதை நாம் அறிவோம்.

அமைச்சர் பதவியை வகித்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தனது கட்சிக்காரர்களுக்காக சிறப்பான அர்ப்பணிப்புகளைச் செய்ய அவர் மறக்கவில்லை.

இதன் மூலம் அவருக்கு தனது தொகுதி மற்றும் மாவட்டத்தின் நற்பெயரும் புகழும் கிடைத்தது. மங்கள சமரவீர அரசியலில் இருந்து விலகிய போது, அவரது மரணம் போன்றே எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. அதற்குக் காரணம் மங்கள என்பவர் அரசியலில் இருக்க வேண்டிய ஓர் அரசியல்வாதி.

போட்டி போட வேண்டிய, போராடக் கூடிய ஒரு போட்டியாளர். அரசியலில் இருந்து ஓய்வுபெறுவதாகக் கூறியவுடன், நான் மங்களவை அழைத்துக் கூறினேன் 'மங்கள, நீங்கள் அரசியலில் இருக்க வேண்டும்' என்றேன். அதற்குக் காரணம், இந்த அரசியல் உலகுக்கு மங்கள போன்ற ஒரு போட்டியாளர் அவசியம்.

அரசியலைத் தனது தனிப்பட்ட வாழ்வில் கொண்டுபோய் பழிவாங்கல்களை மேற்கொள்ளவோ வெறுப்பை ஏற்படுத்தவோ அவர் தயாராக இல்லாதவர்.

நாடாளுமன்றத்திலோ அல்லது பொது மன்றங்களிலோ எமக்கிடையிலான கொள்கை வேறுபாடுகளை நாம் தெளிவாக விமர்சிக்க வேண்டும். ஆனால், மனிதாபிமானம் என்று வரும் போது அரசியலும் மனிதாபிமானமும் இரண்டு விடயங்கள் இல்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இலங்கை அரசியலில் மகத்தான பிரமுகர் ஒருவரான மங்கள சமரவீரவின் மறைவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மூத்த சகோதரி ஜயந்தி குணவர்தன உள்ளிட்ட குடும்பத்தினருக்கு எனது மற்றும் அரசின் சார்பில் ஆழந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன் – என்றார்.